KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. no.19. 10.5.1934.

m211,N28KN
N34.2.19
199169

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் [illegible]
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு மே மீ 10உ [No. 19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 289

2. அப்பர் (64. கலை-இதிகாசம்-இராமன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L 291

3. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 2 களம் 1.)
Goldsmith's—"She stoops to Conquer" 293

4. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 295

5. இரவீந்திரநாதர் கட்டுரைகள்-(ராஜாராம்மோகன் ராய்) W.E. அரியநாயகம். B.A; B.D; B.Ed & ஆஷாதேவி. M.A. 298

6. மதுரைக்கோவை (வெறியாட்டு, வரைவுமுடுக்கம்)
S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 299

7. கம்பராமாயணம்—(நட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 300

8. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 6-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 302

கலாநிலயம்

சுய கல்சர் 2.

மானுடப் பிறவி வாய்த்த யாவர்மாட்டும், சுயகல்சரைச் சாத்தியமாக்கும்படி செய்கின்றசுயஆராய்ச்சி சுயவளர்ச்சி என்னும் இருபெருஞ்சக்திகளும் அமைந்திருக்கின்றவாறும், எனினும் பெரும்பகுதியோர்பால் அச்சக்திகள் இருக்குமிடந் தெரியாமல் உறங்கிக் கிடக்கின்றவாறும், சொன்னோம். உறக்கத்தினின்று இவை கண்விழிக்குமாயின் பின் வேண்டற்பாலது வேறொன்றுமில்லை.

இங்கு,சுயகல்சர் என்பதன் கருத்தை முதன்முதல் சற்றே விரித்துரைத்தல் வேண்டும்; பொதுவாக இதனைத் தெளிந்துகொள்வதும் எளிதே. மரமேனும், மகவேனும், மனமேனும், அறமேனும் எதுவேயாயினும் அதனைக் காப்பதென்னும் கருத்தெல்லாம் வளர்ப்பதென்னும் பொருளாய் முடிகின்றதாதலால்; வளர்ச்சியில்லாவிடத்துக் காத்தலும் இல்லை என்பது புலப்படும். ஜீவனினுடைய சம்பந்தம் இல்லாததொன்றும் வளர இயலாது; மற்று, மேன்மேலும் தாமே வளராதார் ஜீவனுடையவரா யிருந்தும் அது இல்லாதாரேயாகிமுடிகின்றார்.ஆதலினெவனொருவன்தன்னுடைய மேலான சக்திகளையும் சாதனங்களையும் கொண்டுதன் ஒழுங்குவழுவாத் தாளாண்மையுடைய தன்மையில் திப்பிய ஜீவான்மாவை மலர்விக்க முயல்கின்றனனோ அவனேசுயகல்சரைப்பயின்றுவருகின்றவனும்ஆகின்றான்.

மானுட இயற்கையின் சக்திக்கு ஏற்றபடி கல்சருக்குட்பல கிளைகள் இருப்பது உண்மையே. கிளைகள் பலவாயினும், அவையெலாம் நெருங்கித்தொடர்ந்து ஒன்றாகியே வளர்கின்றன. நமதுஆன்மாவின்தன்மைகளை நம் தத்துவசாஸ்திரங்கள் பல்வேறு வகைகளில் பிரித்துக் காட்டினாலும், அது ஒன்றேயாம். எண்ணுவதும் ஆன்மா, உணர்வதும் ஆன்மா, செய்கைகளை இயக்குவதும் ஆன்மாவே என்பார் எனினும், இது அவைகளைத் தனித்தனி நிகழ்த்துவதில்லை; இதன் காரியம் ஒவ்வொன்றிலும் இவைமூன்றும் கலக்கலாகின்றன. எண்ணத்தில் உணர்வும், உணவினால் செய்கையும் ஒன்றோடொன்று விரவிவருகின்றதேயல்லாமல் வேறுவேறாய் அவை விவகரிப்பதென்பதில்லை. அதுவேபோல், நமக்கு இயற்கையான எல்லாப் பாகுபாடுகளும் செம்மைவாய்ந்த சுயகல்சரில் ஒன்றாய்ச் சேர்ந்து ஒருபடித்தாய் வளரலாகும். எனவே, சுயகல்சரின் பிரிவுகளைப்பற்றி நாம் மேலினிப் பேசப்போகின்றோமாகையால், அது ஒவ்வொன்றும் மற்றவைகளோடு சம்பந்தமின்றித் தனித்தனியே தனக்குரிய சிறப்புவகையில் வளர்கின்றதென மதித்து ஒருவரும் பிழைசெய்யாதிருக்கும் பொருட்டு இதனைச் சொல்லிவைக்கவேண்டியதாயிற்று.சுயகல்சரின் விஷயத்தைத் தெள்ளிதின் ஓர்வதற்கு அவ்வாறு பிரித்து உரைக்கநேர்கின்றதேயல்லாது, அவை அப்படித் தனித்தனிப் பிரிந்து நிகழ்வன அல்ல.

தருமசிந்தனையை முதலாகஎடுத்துக்கொள்வோம். மனித இயற்கையில் ஒன்றாகிய இது மிகவும் முக்கியமானது. மனிதன், தன்னுடைய சுயஆராய்ச்சிச்சக்தியால் தன்னையேநன்குநோக்கிக்கொள்வானாயின், இருவேறு வகையான இயக்கங்களைத் தன்பால் காண்பவனாவான். அன்னவாறு காண்பனவற்றுள், தன்னிலே பிறந்து தன்னையே பற்றித் தன்னுடனேயே தொடர்

ந்து, தன்னுடைய நலத்தையும்சுகத்தையும் சிறப்பையுமே நாடி யலைந்து தன்பாலே முடிகின்ற வேட்கை வெறுப்புக்களின் இனத்தைச்சேர்ந்த இயக்கங்கள் ஒருவகையாம். இன்னவைகளுக்கு நேரே மாறுன வேறோர் வகை இயக்கங்களும் தன்னுளே காணக் கிடக்கின்றன. அவைதாம் நடுநிலைமை சுயநலம் கருதாமை முதலிய தூயகுணங்களால் தூண்டப்பெற்று தான் பிறர் என்னும் பேதந்தவிர்ந்து, பிரபஞ்சத்தோடொக்க இயைந்ததாகி, "என்வரினும், என் கடமையிதனை யான்செய்தேதீருவேன்,' என்று தன்னுடைய சுகம் இஷ்டம் இலாபம் முதலியவைகளுக்கு மாறுயிருப்பவைகளையும் கடமையென்னும் கட்டளைக்கல்லில் தேர்ந்தறிந்து இயற்றி ஒருவனை விவகரிக்குமாறு இயக்குகின்றவைகள் ஆகும். இவ்விருவகை இயக்கங்களும் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர் திறம்இருக்கின்றன. தன் இலாபத்தையே நினைத்துநினைத்து ஒருவன் அகம் எவ்வளவுதான் குறுகிவிட்டாலும், தானெனு மெண்ணமே தோய்ந்து தோய்ந்து அவன்மனம் பாறையாக இறுகியிருந்தாலும், மற்றுத் தன்னயம் கைகூட எத்துணைத்தீமைக்கு மஞ்சாத கயவனுயிருப்பினும், அன்னவனும் தன்னுள்ளத்தில்கூடஒவ்வோர் செவ்வியில் சுயநலம்தீர்ந்த சில மேலான நினைவுகள் தோன்றிக் கடமையின்நெறியைக் காட்டியேவருவதுமுண்டென்பதை மறக்கமாட்டான். அசரீரிபோல் ஏதோ ஒருகுரல் அவனகத்தே உற்றெழுந்து, "அறத்தால் வருவதே யின்பம்... .....அறத்தால் வருவதே இன்பம்........மற்றெல்லாம் புறத்த........புறத்த ....புகழுமில........" என்றுரைப்பதுடன் நன்னெறிக்கண் வெஃகாமல் வெகுளாமல் நடந்துவருமாறு அவனை நல்வரவுகூறிஅழைக்கின்றமெல்லொலியையும் பலகால் தன் அகச்செவியினுள் கேட்டிருப்பான். மாநுட இயற்கைக்குரிய இவ்வகை யியக்கத்தைச் சிலர் சிலபோது பகுத்தறிவென்றும், சிலபோது மனச்சாக்ஷியென்றும், சிலர் சிலபோது தருமசிந்தனை என்றும் பலவாறு பேரிட்டு அழைப்பர். இட்டபேர் எதுவாயினும், இந்தத் தருமசிந்தனை மாநுட இயற்கையை அறவே விட்டு அகலமுடியாத தொன்றென்பது நிச்சயம். அதன்மகத்துவ மளவிடற்பாலதன்று. மற்ற அம்சங்களும் இதனையே ஆதாரமாகப் பற்றி வளர்கின்றன. ஆசையும் அழுக்காறும் மனச்சாக்ஷியைவிட மிகுந்த வன்மையொடு வற்புறுத்தித் தூண்டுகின்றன என்பது உண்மையே. எனினும், இவைகளிரையும் கூச்சல், மனசாக்ஷியிடும் கட்டளைபோன்றதன்று. மனசாக்ஷிக்கு இருக்கும் அதிகாரம் அவைகளுக்கில்லை. ஆசைஅழுக்காறுதிய சுயநல நோக்கங்களே முடிவில் தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளினும், தருமசிந்தனை அவ்வெற்றியைஇகழ்ந்துஇடித்துரைக்கும்போது அவை தலைகவிழ்ந்து நிற்கின்றன. ஒவ்வொருவர் அநுபவத்திற்கும் எட்டியதொன்றே இது. நாமொன்றும்புதுமையாகக்கூறவில்லை. இவ்வனுபவத்தைத் திரட்டியே திருவள்ளுவர் "தன்னெஞ்சே தன்னைச்சுடும்" என்று ஓதினர். சுடுகின்றபோது எத்தகையினேரும்சூட்டைஉணர்கின்றனர். ஆனல், காலவரையில் அச்சுடுகை ஆறியபின், இன்னொரு ஆசையும் இன்னொரு அழுக்காறும் தூண்டுங்கால், அதற்கிடங்கொடுப்பின் மறுபடியும் 'சுடும்' என்பதை மறந்துவிடுகின்றனர். சுடுகின்ற சுடுகையோ யாவருக்குந் தெரிந்திருக்க, இனியும் 'சுடும்' என்ற எதிர்கால உண்மையைச் சனங்கள் மறப்பதேனெனவினவலாம். 'சூடுண்ட பூனை நெருப்பண்டை போகாது' என்னும் நியாயம் நெஞ்சின் சுடுகைக்குப் பொருந்தாது. அது புறத்துறு ஆராய்ச்சி. நாமும், நமக்குப் புறமாயுள்ள விஷயங்களால் வரும் நலந்தீமைகளை மறப்பதில்லை. பூனைபோல் நம்மிற் பலர் புற ஆராய்ச்சியுடன் நின்றுவிடுகின்றனர். இக்காலத்தின் எந்திரச் சாதனங்கள், வாழ்க்கைமுறை, வர்த்தகம் பொருளாதாயம் அரசியல் முதலியவைகளின் விதிகள் யாவும் இவ்விதப்புறவுலகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியின்முடிவுகளே. அன்னவகைஆராய்ச்சிகளிலேயேயாவரும் ஆழ்ந்திருக்கின்றனர். அவ்விதமே அகத்திற்குரிய ஆராய்ச்சியிலும்பயிற்சியிருக்குமாயின் ஒருதரம் பொய்த்ததால் நெஞ்சுசுட்டதைக்கொண்டு மறுமுறை பொய்க்க நினைக்கும்போது, நெஞ்சு 'சுடும்' என்பதைத் தேர்ந்து அவ்வாசையையும் அழுக்காற்றையும் அகற்றுபவராவோம். புறத்தையெல்லாம் ஆராயவே நம் கலாசாலைகளும் பொதுஜன வாழ்க்கையும் மற்றிவ்வுலகத்து இயக்கங்கள் யாவும் இந்நாள் நம்மைப்பயிற்றுவிப்பதுமல்லாமல், அப்பயிற்சியால் செய்துமுடிக்கும்பொருள்களே ஆற்றலென்றும் அறிவென்றும் முன்னேற்றமென்றுங் கொண்டாடப்பட்டு வருவதால் நம்மிற்பலர் பெரிய பெரிய பூனைகளுக்குமேல் வளரமாட்டாதவராகின்றனர். கல்சருக்கு ஆதாரமாயிருக்கின்ற மனத்தின் இருவித சக்திகள் ஆகிய சுயவாராய்ச்சி சுயவளர்ச்சி என்று நாம் சென்றவாரம் வகுத்தவைகளில், முதற்சக்தியால், "முன் நிகழ்ந்து கழிந்தனவற்றை நினைத்துப்பார்த்தும் தற்காலம் நிகழ்வனவற்றைக் கவனித்திருந்தும், நாம் பொறுப்பதுந் தளர்வதும் களிப்பதும் கவல்வதும் எவ்வெவற்றின்பால் நேர்கின்றனவென்பதையும்" பன்முறை நம்மையேநாம் ஆராய்ந்துவரப் பயில்வோமாயின், அப்பொழுதேயன்றேபூனையினின்றும்படிப்படியாய் மேலுயரப்பார்ப்பவராதல் கூடும். அப்படிப்பட்ட ஓர் பயிற்சியால் 'சுடும் சுடும்' என்றஞ்சித்தீயவைகளைச் சிறிதுசிறிதுசேராமல் விடுந்தோறும், மானுட இயற்கையின் ஓர் அம்சமாய தர்மசிந்தனை வெற்றிபெற நேர்கின்றது. பெற்றுப்பெற்றுஈட்டிய இவ்வெற்றியால் அதுபலமடைந்துவர, தோற்றத்தோற்று நின்ற அழுக்கா றவாவாகிய கீழினங்கள் தளர்வுற்று மெல்லமெல்ல அழிந்துபோய்விடுகின்றன. ஆன்மவிசாரணை இருக்குமாயின், இருக்கவேண்டும் எனும் நினைவேனுந் தோன்றுமாயின், ஒருநா ளல்லாக்கால் ஒருநாள் நம் இயற்கைத்தருமம் தலையெடுக்காமல் தீராது. சுயநயத்தால்செய்கின்ற பலவற்றைத்தாம் பிறர்நலங் கருதிப் புரிவதுபோல்பாவிக்கின்றனர்பலர். மோசத்திற்காக இப்படிச்செய்வார் கிடக்க, ஒருசிலர் யாவரையும் வஞ்சிக்கவேண்டும் என்ற அவசியமின்றியும் தம்முடைய இலாபத்திற்கே உரிய கருமங்களைப் பரோபகாரமாகத் தாம் செய்கின்றுரென்று மயங்குகின்ற இதற்கும் சுயஆராய்ச்சி இல்லாமையேகாரணம். ஆதலின் எல்லாப்படியாலும் சுயஆராய்ச்சியால் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் இழிவுடைய நோக்கங்கள்எவை, விழுமியநோக்கங்கள் எவை, என்று தெற்றெனத் தேர்ந்துகொள்ள முயல்வதனினும் முக்கியமானது பிறிதொன்றில்லை. அம்[illegible] இவையிரண்டும் பிரியலாகின்றபோ[illegible] மானுட இயற்[illegible] உள்ள தருமசிந்தனை அவ்விடைவெளியில் தனக்குரிய இடம்பெற்று முன்னதைமுறியடித்துப் பின்னதற்கு முடிபுனைதிருநாளைச் சிறப்புடன்நடத்திவைப்பதுமல்லாமல் தானுமே ஏறுதிவீரனுய் முதலமைச்சாய் நற்குருவாய் அருகிலே அமர்ந்துவிடும். இது கனவன்று என்பதை மீண்டுமிங்கு உரைக்கின்றேம். ஒவ்வொருவருக்கும் சாத்தியமானதே. சுய ஆராய்ச்சி என்னும் சக்தி யாருக்குமுளது—அதனைத்தான் துயில்வித்துத் தொலைக்கப்படாது. தருமசிந்தனை யாவர்க்கும் இயற்கை—சுய ஆராய்ச்சியால் இவ்வியற்கை வளர இடமமைத்துத் தருதலே வேண்டும். அவ்வளவே!

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[232-வது பக்கத் தொடர்ச்சி]

2. இராமன் சரிதை

கந்தன் சரிதை தமிழிற்கே உரிய ஓர் சரிதையாகும். இது தமிழ்க்கடவுள் தமிழ்நாட்டில் முன்னோர் நிலத்தில் நடத்திய திருவிளையாடல் முழுதும் குறிக்கும். இராமன் சரிதை அவ்வாறன்று. தமிழ் நாட்டில் பெரும்பாலும் இராமாயணம் நடந்ததெனினும், இது ஆரியச் சரிதையாம். இராமனை ஆரியனெனத் தமிழ்ப் புலவர் கூறுவார். ஆதலால், இராமாயணம் ஆரியச் சரிதையாய் ஆரியவர்த்தத்தில் சிறு பாகமும் தமிழ்நிலத்தில் பெரும்பாகமும் நிறைவேறியதுபற்றி இருநாட்டினுமுள்ள புலவர்க்கும், அச்சரிதையை எழுத உரிமையுண்டாம். வால்மீகி ஆரியத்திற்கும் கம்பன் தமிழுக்கும் அவ்வுரிமையை ஏற்று என்றுமழியாத் தத்தம் கவித்திறனைக் காட்டியுள்ளார்.

இச்சரிதையின் தமிழ்நாட்டிற்குரிய பாகத்தை ஆரியக்கவிகள்எழுதுவதிலும், ஆரியதேசத்திற்குரியபாகத்தைத் தமிழ்க்கவிகள் எழுதுவதிலும் எவ்வெக் குற்றங்கள் நேரக்கூடுமோ, அவ்வக் குற்றங்களுக்கு வால்மீகியேனும், கம்பனேனும் இடந்தராமல் காத்தனரென்று நாம் வற்புறுத்தமுயல்வது பொருந்தாது. வால்மீகி இராமர்காலத்தவராயினும், இராமசரித்திரத்தை ஆரண்யகாண்டம் வரையில் நேரில் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொண்டவராயிருப்பினும், பின் கிஷ்கிந்தா காண்டம்முதல் யுத்தகாண்டம் மீட்சிப்படலம்வரையில் அத்துணை பிரத்தியட்ச ஆதரவுகளைக் கொண்டு அறிந்தாரெனஎண்ணலாகாது. ஆதலால்ஆரியபாடையில் இராமன் சரிதையை எழுதியவர் பலராயும், விஷயபேதங்கள் பலவாயு முள. அக்கவிகளில்மூவரேசிறந்தவராவர்.* ஆயினும் மற்றவர்களையும் நாம் கவனிக்க வேண்டிய அவசியமும், ஆராய்ச்சி பெருகுகின்ற இந்நாளில், இல்லையெனக் கூறலாகாது. ஆகையால் ஆரிய பாடையில்இராமன்சரிதையைப்பாடியவர்கள்யாவர், இதரமொழிகளில் பாடியவர் யாவர் என்பதும், அப்பர்காலத்தில் அன்னோர் பாடிய இராமன் சரிதைகள் எவ்வளவு ஆமோதிக்கப்பட்டனவென்பதும், அப்பரின்படி இராமன் சரிதை யாதென்பதையும் முறையே ஆங்காங்குக் கவனிப்போம்.

(i) இராமன்காதைகளும் அந்நூ லாசிரியர்களும்:— ஆரியத்தில் இராமன் காலத்தில் வால்மீகி ஒருவரே இராமாயணம் எழுதியவரென்று எண்ணலாகாது. அவருக்கு முன்னரும் பின்னரும் பல ஆரியப்புலவரான இருடிகள் இராமாயணம் எழுதியதாகப் பல சான்றுகள்உள. இராமர் தண்டகவனத்திற்குச்செல்வதன் முன்னரும், இராமர் சீதையை மீட்டு அயோத்திக்குத் திரும்பு முன்னரும் சீதா ராம லட்சுமணருக்கு விருந்திட்டுஉபசரித்த பரத்துவாசர் ஒரு இராமாயணம் இயற்றினர். அது இக்காலத்தில் பூரணமாய்க் கிடைக்குமேயாயின் வால்மீகியின் நூலினுஞ் சிறந்ததாகக் கொள்ளப்படும். ஏனெனில் இராமன் சரிதையை, இராமன் வாயிலாகவும், இலக்குவன் சீதை வாயிலாகவும், பின்னர் வாநரவீரர்கள் விபீடணன் வாயிலாகவும் அவர் அறிந்தவாறு, வால்மீகி அறியச் சாத்தியமில்லை. எனினும், வால்மீகி நூல்போல் பரத்துவாசர் நூல் காப்பாற்றப்பட்டு, இராமர் சபையில் அரங்கேற்றப்படாததால், அது பெரும்பாலும்இறந்தது. கம்பன்காலத்திலும் அந்நூல் முற்றும் கிடைத்ததாக எண்ணவும் இடமில்லை.

கம்பனது காலத்தில் பூர்த்திபாக வழங்கிய இராமாயணங்களின் நூலாசிரியர் மூவரேயாவார் என்பது கம்பராமாயண அவையடக்கத்தில் காணலாம். அம்மூவர் முறையே வால்மீகி, வசிட்டர், போதாயநர் என்போர். இவர்களுள் வசிட்டர் எழுதியது ஞானராமாயண மென்னும் ஞானவாசிஷ்ட நூலாகும். இந்நூல், முமூட்சுநிலையில் நின்ற இராமனுக்கு உலகதத்துவத்தையும் சிவதத்துவத்தையும் கதைகளால் உருவகப்படுத்திப் போதித்த ஞான நூலாகும். இது பாலகாண்ட பாகத்தில் ஒன்றைத் தழுவி, இராமன் சீவமுத்தனுன தன்மையை விளக்குவதால், சீவன்முத்தரில் சிறந்தவனுகிய இராமன் மூவுலகத்தையும் தன் மனோசக்தியால் ஆட்டக்கூடுமென்பதை நிரூபிப்பதே இராமாயணமாகும். மாயையையும், அவித்தையையும் அந்தரங்கக் கருவிகளால் அழியச் செய்பவன் பிரம்மவித்து என்பதைப் பிரத்தியக்ஷத்தில் நிச்சயிக்க வேண்டுமென்றல் அச்சக்தியை ஜடவுலகிலுள்ள ஒரு துரும்பு ஏற்கும்படி செய்தாலும், அத்துரும்பு, பாசுபதம் பிரம்மாஸ்திரமுதலிய ஆயுதங்கள்போல் மாட்சிமை எய்தி, காயசித்தி வரப்பிரசாதம் முதலியவைகளைப் பெற்றிருத்தலால் திடகாத்திரத்துடன் அழியாத வன்மைபெற்ற அரக்கரையும் அழித்தல் முக்கிய பரிக்ஷையாகும்.

ஞால முண்டவன் தலைமிசை சுமப்பன்மெய்ஞ்
ஞானி வேண்டுவ தெல்லாம்
ஆல முண்டவ னவன்பினே திரிகுவ
னவன டித்துகட் கன்றே
சீல மன்னரு மற்றுள தேவருந்
திசைதிசை பணிந் தேத்த
காலி ரண்டையுந் தலைமிசை வைபெனக்
கழறு வன்கம லத்தோன்

* தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னுரை யின்படி நற்றமிழ்ப்
பாவி னலிது ணர்த்திய பண்பரோ
—பாலகாண்டம்-அவையடக்கம் 7.

199169

என்னும் ஆன்றோர் மொழியை, அமல இராமாயணமென்னும் ஞானவாசிஷ்டம் நிரூபிக்கும். விசுவாமித்திரமுனி தனதுவேள்வியை முடிப்பிப்பதற்கு இராமனைத் தரவேண்டுமென்று தயரதனை வேண்டிய சமயத்தில், பின்வருமாறு கூறுவார்:—

தேவரிற் றேசு மிக்க வென்பெருஞ் சேமந் தன்னு
லேவரு நிருதர் சேனை யிராமனே யெளிது கொல்லுங்
காவல சிறுவ னென்னுங் கவலையை யொழியென் [போல்வா
ரோவலிற் சங்கை யான கருமத்தி னுள்ளம் வையார்

எனக்கௌசிகமுனிவர்எடுத்துக்காட்டுகின்றார். அவர் மொழிந்தவாறு அவருடைய பெரிய பாதுகாப்பால், இராமர் பற்பல அஸ்திர மந்திரங்களையும், பசிதாகம் நீக்கு மந்திரங்களையும், தாடகைவதத்திற்கு முன்னர் விசுவாமித்திரரால் உணர்த்தப்பெற்றனரென்று வால்மீகியின் இராமாயணத்தில் மொழியப்பட்டது. இம்மந்திர ஞானத்தால் கௌசிகர் வேள்வியைக் காத்துத் தாடகை முதலியோரை அழித்ததாகவும் பிறகு இராவணயுத்தகாலத்திலே கலங்கிநின்ற இராமன் தமிழ் முனியால் ஆதித்த இருதயமென்னும் மந்திரவழிபாடு உணர்த்தப்பெற்று இராவண சங்காரஞ் செய்ததையும் நாம் அறிகின்றோ மன்றோ?

ஆதலால்ஞானராமாயணமான அமலராமாயணம், பிற்காலத்தில் இராமன் சரிதைக்குத் தத்துவார்த்தமாகக் கற்பிக்கப்பட்ட ஒரு நூலன்று. இது வால்மீகி ராமாயணத்தில் ஒரு பாகமாக விருந்ததென்றும் இதுவே அவர் சீடரான † பரத்துவாசருக்கு யோகவாசிஷ்டமென்று போதிக்கப்பட்டதாமென்றும், தற்காலத்தில் வழங்கும் வால்மீகி ராமாயண பாகமாயிராமல், முற்காலத்தில் வழங்கிய வால்மீகியின் சதகோடி ராமாயணத்தின் ஒரு பாகமா மென்றும் சில புலவர் கூறுவர்.

ஆகையால் வசிஷ்டர் செய்த இராமாயணம் வால்மீகியின் நூலில்அடங்கும்.(தரும சூத்திரங்கள் எழுதிய) பேதாயனர் எழுதிய இராமாயணமும்நமக்குக் கிடைக்கவில்லை.கவீந்த்ராசார்ய ஸரஸ்வதி யென்னும் ஓர் காசிவாசியின் ஆச்ரமத்தில் ஒரு புத்தகசாலை யுளதென்றும், வெவ்வேறு இருடிகளால் எழுதப்பட்டவை 23 ராமாயணங்கள் * அதில் இன்றும் உளவென்றும் தெரியவருகின்றது.

இராமன்சரிதையானது ஆரியதேசத்தில்வேதங்கள் போலப் பரவியிருந்ததென்று எண்ணலாம். ஆதலால் வடமொழியில் இராமாயண சம்பந்தமான நூல்கள் ஐம்பதுக்கு மேல் உள. இவையன்றிக் காளிதாசனால் செய்யப்பட்ட இரகுவம்ச மென்னும் நூலும் பட்டிகாவியம் (ராவணவதம்) என்னும் நூலும் இருக்கின்றன. மற்றும்பதினெண்புராணங்களில் பெரும்பாலும் ஒவ்வொருபுராணத்திலும் இராமன்சரிதை குறிப்பிடப்பட்டுள்ள தென்னலாம். அவற்றுள் பத்மபுராணத்தில் இராமன்சரிதை முற்றும் ஒருவகையில் விளங்கும். சில புராணங்கள் இராமனைச் சிவபக்தரின் சிறந்தவனென்று எடுத்துக்காட்டும்.

இராமன் சரிதை யாவராலும் கொண்டாடப்பட்டது. ஆதலினால் அது பற்பல பாடைகளில் மொழிபெயர்க்கப்பட்டது. வால்மீகியின் இராமாயணமே இக்கதைகளுக்கு முதல்நூல் என்று நாம் கொள்ளல் வேண்டும். அது நூறு கோடி சுலோகங்களால் செய்யப்பட்டதென்றும் ஒரு காலத்தில் ஒன்பது லட்சம் காண்டங்களும் தொண்ணூறு இலட்சம் சருக்கங்களும் அமைந்திருந்ததென்றுங் கூறுவர். அதுதான் சதகோடி ராமாயணமென்றும், அதுவே பின்னால் சுருக்கப்பட்டதென்றும் நாம் அறிகின்றோம். இதன் ஒரு பாகமே ஆநந்த ராமாயணமாம். ஆயினும்இப்போது வழங்கும் வால்மீகி இராமாயணக்கதை அதன் சாரகாண்டத்திலும், இராமன் தீர்த்த யாத்திரை, * யாத்திராகாண்டத்திலும், அவர் இயற்றிய அசுவமேதம் முதலிய யாகங்களும், அவருடைய 108 திருநாமங்களும் யாககாண்டத்திலும்,ராஜ்யாதிகாரம் முதலியன விலாஸகாண்டத்திலும், ராமரக்ஷை சீதையைக்காட்டுக்கு அனுப்பியது குசலவர்களின் பிறப்பு ராமன் அவர்களுடன் யுத்தஞ்செய்தது சீதையைச் சேர்த்துக்கொண்டது முதலியன சன்மகாண்டத்திலும், மூலகாசுரவதம் ராமன்திக்குவிசயம் வால்மீகியின் பூர்வசரித்திரம் முதலியன ராஜ்ய காண்டத்திலும், லகு ராமாயணம் ராமபூஜை விதி ராமதோ பத்ரசக்ரம் கவசங்கள் முதலியன மனோஹரகாண்டத்திலும், இராமனுக்கும் சந்திரவம்சத்து ராஜாக்களுக்கும் நடந்தயுத்தம் பூரணகாண்டத்திலும் சொல்லப்படுகின்றன.

இதன்றியும் வாயுவால் கூறப்பட்ட பிரம்மாண்டபுராணத்திலும் இராமன்சரிதை காணப்படுகின்றது. இதை அத்பாத்ம இராமாயண மென்பர். பஞ்சாங்க வடிவில் ஒரு ராமாயணமுண்டு, அது அக்னி வேச்ய ராமாயண மெனப்படும். இவையன்றி மூலராமாயணமென்றும் அற்புத ராமாயணமென்றும் இன்னும் பலவகை * வடமொழியில் உள. ஹிந்தி பாஷையில் ஸ்ரீ துளசிதாஸரும், மாகதிபாஷையில் ஹேமசந்திராசாரிய ரென்னும் ஜைன கவியும், ஆந்திர பாஷையில் பாஸ்கர கவியாலும் மொல்லவென்னும் மாது சிரோமணியாலும் இராமாயணங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. கௌதம புத்தரும் ஒருஇராமாயண மெழுதியதாக வதந்தி.

† என்னு விசிட்ட முனிராமற் கிசைந்தா
னென்று வான்மீகி
சொன்னூ றாறு யிரங்கிரந்தந் தொகையாப்
* பரந்து வாசனுக்குப்
பின்னு ஈதிலா றயிரந்தைப் பிரிந்தா
னிவ்வா றுலகுய்யப்
பன்னு மறைதேர் காஸ்மீரப் பண்டி
தப்பேர் பரமகுரு
—ஞான வாசிஷ்டம் - நிருமாணப் பிரகரணம் - 64

* அவை, முறையே அக்னிவேச்ய, சுக, அத்யாத்ம, மிருகண்டு,வாசிஷ்ட, சங்கர, காகபுசுண்டி, வியாச, வால்மீகி, விபீஷண, ப்ரம்ம, சிவ, அகஸ்திய, சேஷ, ஆகம, கர்ம, ஸ்கந்த, பௌலஸ்த்ய, அருண; பாத, தர்ம, அத்புத, காயத்திரி இராமாயணங்களென்பார். Vide P. XLi Valmiki Ramayanam in Tamil Prose, Bala Kandam Volume. Edited by Mr.S. R. Srinivasa Iyengar of Sanskrit College Madras.

* இந்தப் பரத்துவாசர் வேறு

* ஞான வாசிஷ்டம், வைராக்கியப் பிரகரணத்தில் செய்யுள் 18-20 ல் காண்க.

ஸ்ரீதர ராமாயணம், ஸங்கரஹ ராமாயணம், மந்திர ராமாயணம் முதலியன.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 2. களம் 1.

[286-வது பக்கத் தொடர்ச்சி]

[நெவில்லி வருகிறாள்]

நேவில்லி:—எனதருமை ஹேஸ்ட்டிங்ஸே, எதிர்பாராத எந்த நல்லதிர்ஷ்டத்தால், அல்லதுஎவ்வகைச் சம்பவத்தால், நானுன்னை இங்கு இனிது சந்திக்கப்பெற்றேன், தெரியவில்லையே?

ஹேஸ்ட்:—எனதருமை நெவில்லியை ஒரு சாப்பாட்டு விடுதியில் சந்திக்க நேருமென்று ஒருபோதும் எதிர்பாராத நானன்றோ உன்னை அக்கேள்வி கேட்க வேண்டும்.

நேவில்லி:—சாப்பாட்டு விடுதியா! ஏதோ பிழையிது நிச்சயம்! என் அத்தை, என்னை வளர்ப்பவள் இங்கு வசிக்கின்றாள். இவ்வீட்டை ஓர் சாப்பாட்டு விடுதியென்று உன்னை நினைக்கும்படி எது செய்திருக்கக்கூடும்?

ஹேஸ்ட்:—என்னுடைய நண்பன் மார்லோவும், அவனுடன்வந்த நானும், சாப்பாட்டு விடுதிக்கென்றே இங்கு அனுப்பப்பட்டோம், இது உண்மை. அயலிலுள்ள வொரு வீட்டில் தென்பட்ட வொரு இளைஞனெங்களை இங்கு அனுப்பினான்.

நேவில்லி:—ஓகோ! உருப்படப்போகின்ற என் அத்தானுடைய குறும்புகளில் ஒன்றாகவே இருக்க வேண்டும் இது. இவனைப்பற்றி நான் அடிக்கடி பேசக் கேட்டிருக்கின்றாய். ஹ, ஹ, ஹ, ஹா!

ஹேஸ்ட்:—உனக்கென்று உன் அத்தை கருதியிருக்கின்றானே, அவனா? யாரைஅஞ்சி நான் கவலைப்படவேண்டியது நியாயமோ, அவனா?

நேவில்லி:-அவன்பொருட்டு நீயாதும் அஞ்சவோ வேண்டியதுஇல்லை என்பதை உறுதியாக வைத்துக்கொள். என்னை எவ்வளவு மனப்பூர்வமாய் அவன் வெறுக்கின்றான் என்பதை அறிவாயானால், அவனை அதிகம்கொண்டாடுவாய் நீ. என் அத்தைக்கும் அது தெரியும். ஆகையால் அவனுக்குப் பதிலாய்த் தானே எனக்குக் காதல்காட்டி வசப்படுத்த ஏற்றுக்கொண்டிருக்கிறாள். என்னை வென்று கைப்பற்றிவிட்டதாக எண்ணவும் ஆரம்பித்துவிட்டாள்.

ஹேஸ்ட்:—அருமைமிகுந்தநெவில்லி, இப்படியோ பாசாங்குசெய்கிறாய்! உன் குடும்பத்தினுள் இடம்பெறுவதற்கு இப்பொழுது என்நண்பனிங்குவரநேர்ந்த இச்சந்தர்ப்பத்தைக் கைப்பற்றிக்கொண்டுளேன். நாங்கள்வந்த குதிரைகள் களைத்திருக்கின்றன. எனினும் மிகவிரைவில் இளைப்பாறிவிடும். அப்புறம், உன்பால் உண்மை அன்புடைய என்னிடத்தில் நீ நம்பிக்கை வைப்பாயானால், பிரான்ஸிற்குப் பறந்துபோய் அங்குக் கலியாணம் செய்துகொண்டுவிடுவோம். பிறகு நம்மையார் என்னசெய்ய இயலும்?

நேவில்லி:—நீ சொல்கின்ற எதற்கும் உடன்படநான் எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கின்றேனானும், என்னுடைய சிறிய ஆஸ்தியை விட்டுச்செல்ல எனக்கு மனம் வரவில்லை என்பதை உனக்கு முன்னரே தெரிவித்திருக்கிறேன். அவ்வாஸ்தி எனக்கு என் சிறியதந்தையால் கொடுக்கப்பட்டது; பெரும்பாலும் நகைகளாகவுமிருக்கின்றது. அவைகளைநான் அணிந்துகொள்வதற்கு அனுமதி தரும்படி சிலகாலமாய் என் அத்தையை வேண்டிவருகிறேன். அவளும் சம்மதிக்கின்ற சமயமா யிருக்கின்றது. அந்நகைகள் என்வசமான அந்தநிமிஷமே; அவைகளையும் என்னையும் உன்னுடைமை ஆக்கிக்கொள்ளக் காத்திருக்கின்றேன்.

ஹேஸ்ட்:—நகைகள் நாசமாய்ப் போகட்டும், உன்னையே வேண்டுகின்றேன் நான். இதற்கிடையில், என் நண்பன் மார்லோ தன் தவறைத் தெரிந்துகொள்ளலாகாது. மானம் அதிகம் உடையவன் அவன்; ஆகையால், திடீரென்று சொல்லிவிட்டால், நம்முடைய சூழ்ச்சி முதிர்வதன்முன், இக்கணமே இவ்வீட்டை விட்டுப் போய்விடுவான்.

நேவில்லி:—ஆம். அவரை இம் மயக்கத்திலேயே எப்படி வைத்திருப்பது? உலவச் சென்றிருந்த காதரீனும் திரும்பிவிட்டாள்; இருந்தாலும், உண்மையை இன்னும் மறைத்துவைக்கலாம் என்று எண்ணுகின்றேன்—இப்படி இப்படி வா—

[ஒருபுறம் சென்று ஆலோசிக்கின்றனர்]

[மார்லோ வருகிறான்.]

மார்லோ:—இந்த வீட்டிலுள்ள நல்ல சனங்கள் செய்கின்ற மரியாதையால் நான் படும்தொந்தரவு தாங்கமுடியவில்லையே. என்னைத் தனியே விடுவது மரியாதை இல்லையென்று, தான்மாத்திரமன்றித் தன் கிழமனைவியையும் சேர்த்து என்முதுகின்மேல் தொத்திக்கொள்கிறான் இவ்வீட்டுக்காரன். எங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதற்கு உட்காருவதென்றும் பேசிக்கொள்கிறார்கள். இனி இக் குடும்பத்தவரோ டெல்லாம் இப்படியே உறவு செய்துகொள்ள வேண்டும்போல் இருக்கிறது. இங்கே பேசிக்கொண்டிருப்பது யார்—

ஹேஸ்ட்:—எனதருமை மார்லோ, நல்ல அதிர்ஷ்டம் நமக்கு—இவ்வீட்டினுள் இப்பொழுது வந்தது யாரென்று எண்ணுகின்றாய்?

மார்லோ:—தெரியவில்லையே.

ஹேஸ்ட்:—நாம் காதலிக்க வந்திருக்கும், காதெரீனும் நெவில்லியுந்தா னடா. இவள்நெவில்லி; அயல் வீட்டில் ஓர் விருந்திற்கு வந்தவர், இங்கு நுழைந்தனர். காதெரின் அடுத்துஅறையி லிருக்கிறாள்: இதோ வருவாள். நல்ல அதிர்ஷ்டமல்லவா இது?

மார்லோ:—(ஒருபுறமாய்) படாதபாடு இப்பொழுதே படுகின்றேன். இது வேறு கஷ்டத்தின்மேல் கஷ்டமா!

ஹேஸ்ட்:—நம்முடைய நல்ல அதிர்ஷ்டந்தானல்லவா இது?

மார்லோ:—ஆம் ஆம்! நல்லதிர்ஷ்டந்தான்—இப்படிச் சந்திக்க நேர்ந்தது—ரொம்ப சந்தோஷம்—ஆயினும், ஹேஸ்ட்டிங்ஸே, நாம் அணிந்திருக்கும்ஆடைகள் நேராக இல்லையே.இந்த அதிர்ஷ்டத்தின் பலனை நாம் நாளைவரையில் தள்ளிவைத்தால்தா னென்ன—நாளைக்கு அவள்வீட்டிலேயே—அதுதான் ரொம்ப சவுகரியமா யிருக்கும், மரியதையும் அதுதான்—நாளைக்கே ஆகட்டும் அது. (போகப் பார்க்கிறான்)

நேவில்லி:—இப்பொழுதே நல்லது. நீங்கள் இவ்வளவு முன்பின் பார்ப்பது அவளுக்குத் திருப்தியாயிருக்காது. ஆடை இப்படிக் கலைந்திருப்பதே உங்க

ளுடைய ஆவலைத் தெரிவிக்கும். நீங்கள் இவ்வீட்டில் இருக்கின்றீர்கள் என்பதை அறிவாள்; தன்னை நீங்கள் இப்படியே சந்திப்பதற்கு இசைவாள்.

மார்லோ:—அட, தெய்வமே! எப்படி நான் இதனைத் தாங்குவேன்? ஹூம், ஹூம்! ஹேஸ்ட்டிங்ஸ், நீ என்னைத் தனியேவிட்டுப் போகப்படாது. எனக்குப் பக்கத்துணையாய் நிற்கவேண்டும், தெரியுமா. என்னை எல்லாருமாய்ச்சேர்ந்து பைத்தியகாரனுக்கப் பார்க்கிறீர், அவ்வளவு தான். இருந்தாலும், சீ, சீ! என்ன பயம்; தைரியமாக இருக்கின்றேன், பார்—ஹூம்!

ஹேஸ்ட்:—சீ! போடா! முதலில் துணிந்து குதிக்க வேண்டியதுதான், அப்புறம் ஒன்றுமில்லை, அவள் என்ன, ஒரு பெண்தானே.

மார்லோ:—எல்லாப் பெண்களிலும் நான் எதிர்ப்பட யாருக்கு நடுங்குகின்றேனோ, அவள்.

[காதெரின் வருகிறாள்]

ஹேஸ்ட்:—(அவ்விருவரையும் ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்துவைத்து) இவ்வளவு தகுதி வாய்ந்த இருவரை ஒன்றுகூட்ட நேர்ந்ததைப் பற்றிச் சந்தோஷமடைகின்றேன். கண்டு அறிந்தவுடன் பரஸ்பரம் கண்ணியமுடன் பாராட்டுவீர்.

காதெரின்:—நீங்கள் சவுக்கியமாக வந்துசேர்ந்தது பற்றிச் சந்தோஷம்—வழியில் சில இடையூறுகள் நேர்ந்தனவென்று கேள்விப்பட்டேன்.

மார்லோ:—ஏதோ, கொஞ்சம், அம்மா. ஆம், சில நேர்ந்தன. ஆம் ஆம் அநேகஇடையூறுகள், அம்மா. ஆயினும், வருந்துகின்றேன் - இல்லை, அம்மா, இவ்வளவு இன்பமாய் முடிந்த இடையூறுகளைநினைத்துச் சந்தோஷமே படவேண்டும். ஹூம்!

ஹேஸ்ட்:—(மார்லோவிற்கு ஒருபுறமாய்) உன் ஆயுள்முழுவதும் நீ இதைவிட நன்றாக ஒருபோதும் பேசியதில்லை. விடாதே இந்த வழியை; நீ ஜயமடைவது நிச்சயம்.

காதெரின்:—என்னுடைய திருப்திக்காக இப்படிச் சொல்கின்றீர்போல் இருக்கிறது. எவ்வளவோ பெரிய இடங்களில் பழகியிருக்கிற உங்களுக்கு இந்த நாட்டுப்புறத்தின் ஒரு மூலையில் என்ன சுவாரஸ்யம் இருக்கப்போகின்றது!

மார்லோ:—(தைரியம்செய்துகொண்டு) உலகத்தை ஏதோசிறிதுபார்த்திருக்கிறேன் என்பதுஉண்மையே, அம்மா; ஆனாலோ, மனித சகவாசம் நான் அதிகம் வைத்துக்கொண்டதில்லை.மனிதர் தம் வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருக்க, நானோ அதனைப் பார்த்துக்கொண்டிருப்பவனுகமாத்திரந்தான் இருந்தேன், அம்மா.

நேவில்லி:—இருந்தாலும் கடைசியில் வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இதுவே வழிஎன்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஹேஸ்ட்:—(மார்லோவிற்கு) உன்னிற்சிறந்தஉரையாளர் நான்கண்டதில்லை. இன்னொருதரம்,அப்புறம் நீ என்றென்றும் தைரியத்தில் நிலைத்தவனுகிவிட்டாய்.

மார்லோ:—(ஹேஸ்ட்டிங்ஸிற்கு) அப்படியானால் என் பக்கத்திலேயே துணைநின்று, நான் தள்ளாடும்போது இரண்டொரு வார்த்தைகள் இடையிடையே போட்டு என்னை மீண்டும் நிறுத்திவைக்கவேண்டியது உன் கடன்.

காதெரின்:—ஏற்றுக்கொள்ளத் தகுவதனினும் கடியவேண்டுவதே அதிகம் இருக்குமாதலின், உங்களைப் போன்று மனித வாழ்க்கையை உற்று நோக்கி ஆராய்கின்ற காரியம் மனதிற்கு ஒன்றும் உகந்ததாயிருக்காதென்று எண்ணுகின்றேன்.

மார்லோ:—என்னை மன்னிக்கவேண்டும், அம்மா; இவைகளை வேடிக்கையாகப் பார்க்கவே ஆசைப்பட்டேன். மனிதரில் பெரும்பகுதியோர்தம் அசட்டுத்தனம், சிரிப்பிற்கே யன்றிக் கவலைக்கோ இடமாவதில்லை.

ஹேஸ்ட்:-(மார்லோவிற்கு) பேஷ், பேஷ்! உன் ஆயுளில் இவ்வளவு நன்றாக நீ ஒருபோதும் பேசியதில்லை. நல்லது, காதெரின், நீங்களும் மார்லோவும் மனமொத்து அளவளாவும் ஆசையுடையவர்களாவீர் என்பது தெரிகின்றது. நாங்கள் இங்கு இருப்பது அதற்குத் தடையாயிருக்கும் என்று எண்ணுகின்றேன்.

மார்லோ:—கொஞ்சங்கூட இல்லை,ஹேஸ்ட்டிங்ஸ் நீயும் இங்கு இருக்கவேண்டும் என்பதையே அதிகம் விரும்புகின்றோம். (அவனுக்குத் தனியாய்) அடேயடே, என்ன, போவாயா, எங்களைவிட்டுப் போகவே போய்விடுவாயா!

ஹேஸ்ட்:—நாங்கள் இருப்பது உங்கள் சம்பாஷணையைக் கெடுத்துவிடும்; ஆகையால் அடுத்த அறையில் போயிருப்போம். (அவனுக்குத் தனியாய்) நாங்களும் எங்களுக்குள்ளே சில காரியங்களை முடித்துக் கொள்ள வேண்டுமென்பதை நினைக்கவில்லையா நீ.

[நெவில்லியும் ஹேஸ்ட்டிங்ஸூம் போகின்றனர்]

காதெரின்:—ஆயினும், ஐயா, நீர் முற்றிலும் மற்றவர் வாழ்வதைப் பார்ப்பதே கருமமாகக் கொண்டிருந்தீர் என்று நான் நினைக்கவில்லை. உங்கள் கவனத்தின் ஒருபாகத்தை மாதர்கள் தங்களுடையதாக்கிக் கொண்டிருக்க வேண்டுமே.

மார்லோ:—(கலக்கமடைந்து) அம்மா, என்னை மன்னிக்கவேண்டும். நான்—நான்—நான், இதுவரையில் அவர்களை யடையத்தகுந்த யோக்கியதையைப் பெறுவதற்கே முயன்றுவந்தேன்.

காதெரின்:—அவர்களை அடைவதற்கு இதைவிடப் பயனற்ற வழி வேறு இல்லையென்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கின்றேனே.

மார்லோ:—இருக்கலாம், அம்மா, இருக்கலாம். ஆயினும், பெண்பாலார்களில் நிதானபுத்தியும் நல்லறிவும் உடையவர்களுடன்தான் உரையாடும் விருப்பம் எனக்குண்டு. போதும், என் பேச்சினால் உங்களைச் சலிப்படையச் செய்கிறேன் என்பது தெரிகின்றது.

காதெரின்:—இல்லை, ஐயா, இல்லை. நிதான புத்தியுடன் உரையாடுவதைப்போல் விருப்பமுடையது எனக்குந்தான் வேறொன்றுமில்லை; ஓயாமல் அதனைக் கேட்டுக்கொண்டிருப்பேன். நுண்ணிய உணர்வுடையவொருவன், இதயத்தை எட்டாமல் மேலேதோன்றி மறையும் இன்பங்களை எப்படித்தான் ஏற்றுக்கொண்டு பாராட்டுகின்றானோ வென்று நான் ஆச்சரியப்படுவதுண்டு.

மார்லோ:—அது, அம்மா,...மனத்தின்...அம்மா, ஒரு நோய். சுவைகள் பலவிதம். அதில் சிலர்...உம்...உம்...உம்-அ...உம்...

காதெரின்:—நீங்கள் சொல்லவருவது தெரிகின்றது. மென்மையும் நுண்மையும் வாய்ந்த இன்பங்களை அனுபவிக்கமாட்டாமல் சுவைகெட்டுக் கிடப்பவர் சிலர், தாங்கள் அனுபவிக்க இயலாததைப் பழிப்பவர்போலப் பாவனைசெய்கிறார்கள், என்பது உங்கள் கருத்து.

மார்லோ:—அதுதான் அம்மா, என் கருத்து. நீங்களோ அதனை மிகவும் செம்மையான சொற்களால் அமைத்துக் கூறினீர். இன்னும்ஒன்று நான் சொல்ல வேண்டியது என்னவென்றால்—

காதெரின்:—(ஒரு புறமாய்)இவனு சிற்சிலபோது துணிவும் துடுக்குமுடைய நடத்தையை மேற்கொள்பவன்! சொல்வார் சொன்னாலும் யார் அதை நம்ப இயலும்.(அவனைப் பார்த்து) இன்னும் ஒன்று ஏதோ சொல்ல விரும்பினீர்களே, ஐயா—

மார்லோ:—ஆம், நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால், - அம்மா, நான் என்ன சொல்ல விரும்பினேன் என்பது அடியுடன் மறந்துபோய்விட்டது.

காதெரின்:—(ஒருபுறமாய்) எனக்குந்தான் மறந்துபோய்விட்டது. (அவனைப் பார்த்து) நீங்கள் சொல்லவந்தது, பொய்வேடமே புனைந்து திரிகின்ற இக்காலத்தில்...பொய்வேடத்தைப்பற்றி ஏதோசொல்ல வந்தீர், ஐயா ..

மார்லோ:—ஆம், அம்மா, ஆம். பொய்வேடமே புனைந்து திரிகின்ற இக்காலத்தில், உற்று நுழைந்து ஆராய்ந்தால், யார்தான்...உம்...உம்...உம்...

காதெரின்:—ஆம், நீங்கள் சொல்வது நன்றாக விளங்குகின்றது.

மார்லோ:—(ஒருபுறமாய்) அடேயடே; எனக்கே விளங்கக்காணோம்; இவளுக்கு விளங்குகின்றதாமே!

காதெரின்:—பொய்வேடம் புனைந்து புனைந்து திரிகின்ற இக்காலத்தில், இரகசியமாகத் தாங்கள் செய்வதையே பகிரங்கமாகக் கண்டிக்காதவர் மிகச் சிலர் என்றும், அப்படிக் கண்டிப்பதாலேயே தருமத்திற்குத் தாங்கள் செலுத்தவேண்டிய கடன் அத்தனையும் செலுத்திவிட்டதாகப் பாவிக்கின்றார்கள் என்றும் இப்பொழுது சொல்லவேண்டு மென்பது உங்கள் கருத்தோ?

மார்லோ:—அம்மா, அது உண்மை. எத்தனைக்கு எத்தனை ஒருவன் தருமத்தைத் தன் வாயிலே காட்டுகின்றானோ அத்தனைக்கத்தனை அவன் இதயத்தில் இல்லை என்பது நிச்சயம். போதும் அம்மா, என் பேச்சு உங்களைச் சலிப்படையச்செய்கின்றதென்பது தெரிகிறது.

காதெரின்,—இல்லை இல்லை, சற்றேனும் இல்லை; உங்கள் பேச்சில், என்ன மென்மை, என்ன இனிமை, என்ன ஊக்கம், என்ன உயிர்—நல்லது, ஐயா, தயைசெய்து மேலே சொல்லுங்கள்.

மார்லோ:—ஆம், அம்மா, நான் சொல்லிக்கொண்டிருந்தது என்னவென்றால்—சிலசமயங்களில்—ஒருவனுடைய தைரியம் அடியுடன் உடைந்துபோய்விடுமானால், அதனால் எல்லாம் அழிந்து,அம்மா,அவனை ...அ...அ ..அ...

காதெரின்:—நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். தைரியக் குறைவானது ஒருவனை மூடனைப் போல் தோன்றும்படி செய்து, எங்கு மிகவும் சிறந்து விளங்கவேண்டுமென்று முயல்கின்றானோ அப்பொழுதே நம்மைக் காட்டிக்கொடுத்துவிடுகிறது. தயை செய்து மேலே சொல்லுங்கள்.

மார்லோ:—ஆம், அம்மா; பார்க்கப்போனால், அம்மா-இருக்கட்டும்...ஹேஸ்ட்டிங்ஸூம் நெவில்லியும் நம்மை எதிர்பார்த்திருப்பார்கள்...நீங்கள் அங்குச் செல்வதை நான் தடுத்திருப்பது அழகன்று.

காதெரின்:—உங்களுடன் உரையாடுவதைப்போல் நான் இதுகாறும் எதனையும் உவந்ததில்லை. தயை செய்து மேலே சொல்லுங்கள்.

மார்லோ-—ஆம், அம்மா, ஆம் ஆம். நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன் என்றால்—அதோ, நம்மை வரும்படி அழைக்கின்றார்களே. போவோம் வாருங்கள்.

காதெரின்:—நல்லது போவோம்.

மார்லோ:—(ஒருபுறமாய்) மழமழவென்று ஒழுங்காகப் பேசிய இந்தப் பேச்சுப் போதுமப்பா எனக்கு.

[போகிறான்]

காதெரின்:—ஹ! ஹ! ஹா! எவ்வளவு கௌரவமாய்த் தர்மநிந்தாரணம் செய்து முடித்தோம். இவ்வளவு நேரம் பேசியதில், என் முகத்தை நிமிர்ந்து அவன்பார்க்கவேயில்லை என்பது நிச்சயம். இந்த விபரீதமான கூச்சம்கிடக்க, மற்றபடி அவன் நன்றாகத்தான் இருக்கிறான். நல்ல அறிவும் இருக்கிறது. ஆயினும் அது அவன் பயத்திற் கடியில் புதையுண்டு கிடப்பதால், மூடத்தனத்தைவிடச் சலிப்படையச் செய்கின்றது.அவனுக்குச் சிறிது தைரியம் வரும்படி கற்பிப்பேனானால்,எனக்குத் தெரிந்த ஒருவருக்கு ஒரு நல்ல உபகாரம் செய்ததாகும். ஆனால்—அந்த ஒருவர் இப்பொழுது ஆர்? இந்தக் கேள்விக்குப் பதிற் சொல்ல இயலவில்லையே.

[போகிறாள்]

தமிழ்ப்பாடம் 119.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[277-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

ஏவி லங்குசிலை யைவர்வந் தணுகில்
யானயர்ந் தெளிதி ருப்பனோ
கோவி லங்கு பொரவஞ்சு மோகரட
குஞ்சரங் கள்பகை கொண்டகான்
மேவி லங்குமுன் மலைத்தல் கையறைய
வேண்டுமென் றதுநின் மேன்மையோ
நாவி லங்குமென வெண்ணியோ மிகவு
நன்றுநன் றரசர் ஞாயமே. 55.

பதவுரை.

ஏ - அம்புகள், இலங்கு- விளங்குகின்ற, சிலை - வில்லைக் கையில் ஏந்தியிருக்கின்ற, ஐவர் - பஞ்சபாண்டவர்கள், வந்து அணுகில் - போர் செய்வதற்கு வந்து அடைவார்களேயானால், யான் - நான், அயர்ந்து -

சோர்வு உற்று, எளிது இருப்பனோ - எளியவர்போல் சும்மா இருப்பேனோ?

கரட - மதம்பொழிகின்ற, குஞ்சரங்கள் - யானைகள், பகை கொண்டகால் - பகைகொண்டு வருங்கால், கோவிலங்கு - விலங்குகளின் அரசனான சிங்கம், பொர - போர்செய்ய, அஞ்சுமோ - பயப்படுமோ!

அங்கு - குருக்ஷேத்திர பூமிக்கு, மேவில் - வருவார்களானால், மலைத்தல் - போர் செய்வதாக, முன் - போர்நிகழு முன்னமேயே, கை அறைய வேண்டும் - நான் கை அறைந்து கொடுக்கவேண்டும், என்றது - என்றுகூறியது, நின் - உன்னுடைய, மேன்மைபோ - பெருமையைக் காட்டக்கூடியதோ!

நா விலங்கும் - எனது வார்த்தை பிறழும், என - என்று, எண்ணியோ - மதித்தோ (நீ இப்படிக் கேட்டாய்)

அரசர் - அரசர்களிடத்தில் பேசும், நியாயம் - இந் நியாயமானது, நன்று நன்று - மிக நன்றாயிருக்கின்றது.

விரிவுரை:—'உரைத்த உண்மைமொழி பொய்த்ததென்று அமரர் புகலில் என்,' என்றுகூசாது பேசிய வாய்உலராமுன்னம், 'நா விலங்குமென எண்ணியோ, என்னைக் கைஅறைந்து தரவேண்டுமென்று கேட்கின்றாய்' என்று துரியோதனன் இங்குச் சீறுவது காண நமக்கு நகையே மிகுகின்றது. மெய்யுடைய வொருவனது வாய்மையை அயிர்த்தக்கால் அவனுக்கு இத்துணைக் கோபம் வந்திடாது; மற்றுப் பொய்யன்றி வேறொன்றும் புகல்வதற்கறியாத் துரியோதனனனையார் தம்முடைய பேச்சு அயிர்த்தற்கும் அடுக்காது என்று ஆரவாரம்செய்தல் இயற்கையே.

குறிப்பு:—விலங்குபொர எனும் அது எழுவாய்த் தொடர்; ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. கரட குஞ்சரம் என்பது, இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; எனினும், நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டும் வடமொழிகள் ஆதலால் வல்லினம் மிகவில்லை.

அளிவ ருங்குழல் பிடித்துமன் னவையி
லைவருக் குமுரி யாளைநா
னெளிவ ருந்துகி லுரிந்த போதரு
கிருந்து கண்டவர்க ளல்லரோ
துளிவ ரும்புனல் பரிந்தருந் தியிடு
சோறுதின் றுயிர்சு மந்துதோ
ளிளிவ ரும்படி யிருந்தபா வியரு
மின்று மானநிலை யுணர்வரோ 56.

பாண்டவர்களுக்கு மானம் அவமான மொன்றுமில்லை என்று துரியோதனன் ஏசுகின்றான்.

பதவுரை.

மன் அவையில் - இராஜசபையில், ஐவருக்கும் - பாண்டவர்கள் ஐந்து பேருக்கும், உரியாளை - மனைவியாகிய திரௌபதியைக் கொண்டுவந்து, நான் - நான், அளி - வண்டுகள், வரும் - வந்து சேர்கின்ற, குழல் - அவளது கூந்தலை, பிடித்து - பிடித்து, எளி வரும் - பாண்டவர்களுக்கு அவமானம் வரும்படி, துகில் உரிந்தபோது - துகிலை உரிந்தசமயத்தில், அருகுஇருந்து - பக்கத்தில் நின்று, கண்டவர்கள் - பார்த்துக்கொண்டிருந்தவர்கள், அல்லரோ - அல்லரோ அவர்கள்.

துளிவரும் - துளித்துளியாகச் சிதறுகின்ற, புனல் - நீரை, பரிந்து - விரும்பி, அருந்தி - அருந்தியும், இடு - பிச்சையாக இடப்படும், சோறு - சோற்றை, தின்று - தின்றும், உயிர் சுமந்து - உயிரைத்தாங்கி, தோள் - புஜங்கள், இளிவரும்படி - இழிவை அடையும்படி, இருந்த - இருந்த, பாவியரும் - பாவிகளாகிய பாண்டவர்களும், இன்று - இப்பொழுது, மானநிலை - மானம் எனும் நிலையை, உணர்வரோ - அறிவார்களோ!

விரிவுரை:—'நாணமற்ற பாண்டவர்க்குத் தூது வந்த நீ, மன்னர்மரபும் அவைமுறையும் எப்படி அறியப் போகிறாய்' என்று துரியோதனன் கண்ணனை ஏசுகின்றான். தம்முடைய மானத்தைக் காக்காத கீழ்மக்களே, பிறருக்குப் பரிவம் உற்றதென்று பழிக்கமுற்படுவர். கொழுந்தியென்றும்பாராமல் திரௌபதியைத் துகில் உரிந்த செய்கை மிக்க மானமுடைய செய்கையாம். அதைக்கண்டுசும்மாவிருந்தவர்க்கே அவமானம் விளைந்ததாம். கெடுத்தது தானேயாக, கேடுற்றவர்களைக் குறைகூறிப் பழிப்பது கயவர்குணங்களில் ஒன்றாகும். 'இடுசோறு தின்ற பாவியர்' என்று பாண்டவரைத் துரியோதனன் இகழ்ந்தது அவ்விழிகுணத்தின் பாற்படும். 'துளிவரும் புனல் அருந்தினவர்' என்றது பீமசேனனைப் பழித்ததாகும். மன்னவையில் பாஞ்சாலியை மானபங்கம்செய்தபோது, அண்ணனுக்கஞ்சிச் சும்மாவிருந்த வீமசேனன், 'இக்கொடுமை புரிந்த துரியோதனனைக் கொன்று அவனது உதிரத்தை என் கையில் ஏந்திப் பருகும்வரையில், என் கையால் நீர் அருந்துவதில்லை' என்று சபதம்செய்துகொண்டான். அன்றுமுதல் வீமசேனன், நீர்நிலை சென்று, கதையாலடிக்க மேலெழும் துளிகளை வாயால் ஏந்தியே நீர் குடிப்பது வழக்கம்.

அன்னை யானவரு மிருவரா முதல
ளித்த தந்தையர்க ளைவராம்
பின்னை யாசைகொடு குருகுலத் துரிமை
பெறுவ ராமொரு பிறப்பிலா
மின்னை யாமி வர்க ளைவரும்
பரிவினொடு தனித்தனி விரும்புவா
ரென்னை யாமவரொ டொருகுலத் தரச
னென்ப தம்மவிவை யென்கொலாம். 57.

பிறப்பா லிழிந்த பாண்டவர், தன்குலத்தவர் ஆகாரெனத் துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை.

(பாகம்கேட்கும் பாண்டவர்களுக்கு) அன்னை ஆனவர் - தாய் ஆனவர்கள், இருவர் ஆம் - குந்தி மைத்ரி என்னும் இருவர் ஆவார்; முதல் - இவர் பிறப்பதற்குக் காரணமாயிருந்து, அளித்த - பெற்ற, தந்தையர்கள் - தந்தைமார், ஐவர் ஆம் - ஐந்து பேர்கள் ஆவார்; பின்னை - (இப்படிப்பட்டவர்கள்) பின்னை, ஆசைகொடு - பேராசையினால், குருகுலத்து உரிமை - குருகுலத்தவர்களின் உரிமையை, பெறுவர் ஆம் - பெற விரும்புவார்கள், ஒரு பிறப்பு இலா - ஒருவிதமான பிறப்புமில்லாமல் நெருப்பில் தோன்றிய, மின்னை ஆம் - மின்னலை ஒத்த பாஞ்சாலியை, பரிவினொடு - ஆர்வத்தோடு, தனித் தனி - தனித்தனியாக, இவர்கள் ஐவரும் - இந்த ஐந்து பேரும், விரும்புவார் - விரும்புவார்களாம்.

(இப்படிப்பட்ட பிறப்பும் மணையறமும் உடையவர்கள்) என்னை ஆம் - என்னை, அவரொடு - தங்களோடு, ஒருகுலத்து - ஒருகுலத்தைச் சேர்ந்த, அரசன் - அரசன், என்பது - என்பதானது, அம்ம - என்னவிந்தை, இவை என் கொல் ஆம் - இவ்வாறு கூறுவதை என்னென்று சொல்வது.

விரிவுரை:—பாண்டவர்க்கு அன்னையர் இருவரும் தந்தையர் ஐவரும் அமைந்த வரலாறு முன்னரே கூறப்பட்டிருக்கின்றது—(7வது வால்யூம். 20-வது பக்கம்.) அண்ணன் தம்பியரென்று ஐவரிருந்தால் இவர்களனைவருக்கும் தந்தை ஒருவனும், மனைவியர் தனித்தனி ஐவரும் இருப்பது முறை. இப்பாண்டவர்களுக்கோ மனைவி ஒருத்தியும் தந்தையர் ஐவரும் ஆவதைக் காட்டித் துரியோதனன் இங்குப் பரிகசிக்கின்றான். "யமதருமனுக்கும் வாயுவிற்கும் இந்திரனுக்கும் அசுவனிதேவர்களுக்கும் பிறந்த பாண்டவர்க்கும் எனக்கும் என்ன இரத்தசம்பந்தமிருக்கின்றது? நானும் அவர்களும் ஒருகுலத்தவரென்றுஉரைப்பது எங்ஙனம் அமையும். பின் அவர் குருகுலத்து உரிமையென்று எந்த வாய்கொண்டு கேட்கலாம். அன்னவர்க்குத் தூதுவந்த கண்ணன் தானும் புன்பிறப்புடையவன், என்னை நோக்கிக் கையறைந்து தாவென்று கூசாது கேட்கத் துணிந்தனனே" என வெறுப்பது துரியோதனனுடைய கருத்து.

இலக்கணம்.

F. ஆறும் வேற்றுமை.

ஆறும் வேற்றுமையின் உருபு பொருள் முதலியன, முன் (5வது வால்யூம், 943வதுபக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றன. ஆறும் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள் தமிழில் அமைவதில்லை.

I. ஆறும்வேற்றுமை உருபுகளாகிய, அது, ஆது, அ, உடைய என்பவைகளை ஏற்றிருக்கின்ற நிலைமொழிகளுக்குப்பின் வருகின்ற மொழிமுதல் வல்லினமெய் மிகாது.

எனது + சிரம் = எனது சிரம்.
மானினது + பார்வை = மானினதுபார்வை.
மயிலினது + தோகை = மயிலினது தோகை.
எனது + கை = எனது கை.
என + கைகள் = என கைகள்.
அரசனுடைய + பொருள் = அரசனுடையபொருள்

II. ஆறும் வேற்றுமைத் தொகையில் பெரும்பான்மை வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

கை + திறம் = கைத்திறம்.
புலி + தோல் = புலித்தோல் (புலியின்தோல்).
பறவை + சிறகு = பறவைச் சிறகு.
பந்து + திரட்சி = பந்துத் திரட்சி.
கொக்கு + கூட்டம் = கொக்குக் கூட்டம்.
கலை + பெருமை = கலைப் பெருமை.
கூழ் + சுவை = கூழ்ச் சுவை.
தேர் + கால் = தேர்க்கால்.
நாய் + குரல் = நாய்க்குரல்.
புழு + தலை = புழுத்தலை.

குறிப்பு;—உருபு தொக்கிருக்க, நிலைமொழி சாரியை மாத்திரம் பெற்றிருப்பினும் வருமொழி முதல் வல்லினமெய் மிகும்:—

மரத்து + கிளை = மரத்துக்கிளை
குலத்து + பெருமை = குலத்துப் பெருமை

ஆறும்வேற்றுமைத் தொகையில் பெரும்பான்மை வருமொழிமுதல் வல்லினமெய் மிகும் என்றோம். மிகாத இடங்களும் உள. அவை பின்வருமாறு.

(1) நிலைமொழி உயர்திணையாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

புலவர் + கூட்டம் = புலவர் கூட்டம்
சீதை + தலை = சீதை தலை

(2) நிலைமொழி வருமொழி இரண்டும் சமஸ்கிருதபதங்களாயிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

சாகர + சீதளம் = சாகர சீதளம்
முகுர + பிம்பம் = முகுர பிம்பம்
வதன + சோதி = வதன சோதி

(3) நிலைமொழி, இடைத்தொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றிலுடையதாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

மார்பு + பெருமை = மார்பு பெருமை
போழ்து + செலவு = போழ்து செலவு
தெள்கு + கால் = தெள்கு கால் (தெள்கு = ஒரு பூச்சி)

குறிப்பு:—ச் ட் ற், என்றமெய்களில்ஏறிய இடைத்தொடர்க் குற்றியலுகரங்கள் தமிழில் வழங்கிவரக் காணோம்.

(4) நிலைமொழி ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றிலுடையதாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

எஃகு + கூர்மை = எஃகு கூர்மை.

(5) நிலைமொழி, க் ச் த் என்னும் மெய்களின் மேல்ஏறிய நெடிற்றொடர்க்குற்றியலுகரங்களைஈற்றில் உடையதாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

பாகு + சுவை = பாகு சுவை
காசு + கதிர் = காசுகதிர் (காசினது கதிர் - மணியின் ஒளி)
காது + பருமன் = காதுபருமன் (காதினது பருமன்)

குறிப்பு:—பகர மெய்யின்மே லேறிய நெடிற்றொடர்க்குற்றியலுகரம் வழங்கிவரக் கண்டிலோம்.

(b) க் ச் த் ப் என்னும் மெய்களின்மே லேறிய உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தில் முடிகின்ற நிலைமொழியோடு புணரும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

படகு + செலவு = படகு செலவு
அரசு + பெருமை = அரசு பெருமை
விழுது + செம்மை = விழுது செம்மை
மரபு + பெருமை = மரபு பெருமை

குறிப்பு:—எனவே, ட் ற் என்ற மெய்களின்மேலேறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களேனும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களேனும், நிலைமொழியீற்றிலிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் மிகும். அம்மெய் மிகுவதோடு, இக்குற்றியலுகரம் ஏறியிருக்கும் ட் ற் என்ற மெய்கள் நிலைமொழியில் இரட்டும். (முன், 6 வது வால்யூம், 891-வது பக்கத்தில், இக் குற்றியலுகரங்களுக்குப் பின் உயிர்வரின், அக் குற்றியலுகரம் ஏறியிருந்த மெய்கள் இரட்டிப் புணருந் தன்மையை விளக்கி யிருக்கின்றோம்)

வீடு + கதவு = வீட்டுக்கதவு } நெடிற்றொடர்
ஆறு + பாய்ச்சல் = ஆற்றுப் பாய்ச்சல் }

உதடு + பருமன் = உதட்டுப் பருமன் } உயிர்த்
வயிறு + கொடுமை = வயிற்றுக்கொடுமை } தொடர்

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

ராஜா ராம்மோஹன் ராய்

[278-வது பக்கத் தொடர்ச்சி]

மனித சரித்திரத்தில் முக்கியமான காரியம் நடைபெறவேண்டிய இடம் எதுவென்று வினவினால், மடமையாலும் மெய்யறிவின்மையாலும் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே எங்குப் பிரிவுஏற்பட்டிருக்கிறதோ அவ்விடமேதான் என்னல் வேண்டும்.மானுடத் தொகுதியின்கண் யாதினும் முதன்மையான மெய்ம்மை, ஒற்றுமை.மனிதரென் றிருப்போர் அனைவரும் ஒன்றுசேரப் பயிலும் சாதனையே நாகரிகம்என்பதன் நிச்சயமான பொருள். இச்சாதனை வலியற்று இருக்குமானால்,அந்நொய்மையானது பலப்பலபிணிகளாக உருவெடுத்துநாற்றிசையிலும்வந்துநெருக்குகின்றது.

பாரதநாட்டின் முக்கியமான கருமம் யாதென்பதில் ஐயமில்லை.ஏனைய தேசங்களிற்போல் அல்லாமல் பலபல சாதியைச் சேர்ந்தவர் இங்குக் குழுமியிருக்கின்றனர். இப்படிக் குழுமியிருப்பவர்களை உண்மையானஉறவினால் ஒற்றுமைப்பட்டு வாழும்படி கூட்டிவிடவேண்டும். இதுவே இப் பரதநாட்டின் யாதினும் முக்கியமான காரியம். வெளியில் நிகழ்த்தும்சடங்குகளாலும் ஆசாரங்களாலும் அல்லாமல் உள்ளத்தையே பற்றிய உறவினால் இவ்வொற்றுமை அமைதல் வேண்டும். சரித்திரந்தோறும் தலைசிறந்த மந்திரமாய் நிற்கவல்ல வாசகம், "ஸங்கச் சத்வங் ஸங் வதத்வங் ஸங் வோ மநாங்ஸி(ஒன்றாய் நடவுங்கள், ஒன்றாய்ப் பேசுங்கள், ஒரே மனது உடையவர்களா யிருங்கள்) என்பதாம். இம்மந்திரத்தை இன்று இப்பாரதநாட்டில் சாதிப்பதுபோன்றதோர் கஷ்டம்வேறு எந்நாட்டினு மில்லை. கஷ்டம் பெரிதே யாகினும், இச்சாதனை கைகூடுவது தவிர உய்யும்வழி வேறொன்றுமில்லை.

அயல்நாடுகள் சிலவற்றின் செல்வப்பெருக்கினைக் கண்டுநாம் மயங்குகின்றோம். அவைகளின் செல்வம் நிறைந்த தோற்றத்தினை நாடி நம்முடைய பேராசை கொண்ட பார்வை செல்கின்றது. எனினும்,எத்துணை வருந்தி முயன்று அந்தச்செல்வத்தினை அவர் சாதித்திருக்கின்றனர் என்பதை நாம் கருதுவதில்லை. சுயாதீனமுடைய தேசங்களின் அரசியல்முறைகளைப்பார்க்கிறோம்; அம்முறைகள் மாதிரியாகவே நாமும் சில செய்துகொள்ளக்கூடுமாகில், நமக்கும் ஓர் சுயாதீனம் கிடைத்துவிடும் என்ற எண்ணம் நமக்குள் உண்டாகின்றது. அரசியல் முறைகளெல்லாம் ஒரு பிராணியின் உடல் போன்றதே யென்பதை மறந்துவிடுகின்றோம். உயிரில்லாவிடில் அவ்வுடல் பொருளற்றதே. இந்தத் தேசத்தினர்க் குள்ளாகிய ஒற்றுமையே அவ்வுயிர். இவ்வொற்றுமையின் வலிமையினாலேயே அரசியல்முறைகள் எங்கும் விருத்தியடைந்திருக்கின்றன. ஏனைய தேசங்களிலும் இவ்வொற்றுமை பழுதடையுமாயின், அப்பழுதின் அளவிற்கு ஏற்ப அது தன் கருமத்தை நிறைவேற்றுவதும் கஷ்டமாகி விடுகின்றது. நம்முடைய தேசத்தில் ஜாதி வித்தியாசம் இருக்கின்றதென்றால், பிறதேசங்களில் மனிதர்வகுப்புவகுப்பாகப்பிரிக்கப்படுகின்றனர்.இப்படிப் பிரிந்திருக்கும் மனிதர்களை உள்நின்று இணைக்கும் பிணிப்பு ஒன்று இல்லாமற்போனால், சட்டதிட்டங்களெல்லாம் குற்றங்களையே விளைவிக்கும்.

வயல் நிறையப் பயிர் விளைந்திருப்பதைக் காணுங்கால், முதலில் நாம், இவ்வேளாண்மை மணலில் செய்யப்படவில்லை என்பதை நினைத்தல் வேண்டும்; அது நல்லநிலத்திலேயே விளைந்தது.செடிகள் ஒன்றோடொன்று நெருங்கியிராமல் அகன்று அகன்று நிற்பதை மணற்பாறில் காணலாம். அவைகள் தம் முட்களால் தனித்தனி தம்மைக் காத்துக்கொள்கின்றன. மாதாவாகிய பூமி, மணற்பாங்கில் எல்லாச் செடிகளுக்கும் ஒரே அளவான வண்மையுடனேனும் ஒரே வகையான சாரத்தையேனும் ஊட்டவில்லை. அவைகளுக்கிடையே உயிரின் ஒற்றுமை குறைபட்டிருக்கின்றது. விளைநிலமாயிருந்த மணல் வேறுவேறாகிப்பிரிந்து ஒற்றுமையில்லாமல் இருப்பதே, அங்கு வளர்ந்த செடிகளும் வேறுவேறாகி அகன்று நிற்பதற்குக் காரணமாகும். நல் நிலத்தில் மண்ணின் அணுக்களெல்லாம் ஒற்றுமையுற்று நெருங்கி யிருக்கின்றன; ஆகையால் அவ்வயலில் பயிர்களும் அடர்ந்து விளைகின்றன. இந்த உண்மையை நினைவில்வைத்து ஒரு தேயம் அமைந்திருக்கின்ற நிலைமையின் தன்மையையும் மதித்தல் வேண்டும்.

செல்வம் நிறைந்திருக்கின்ற ஒருதேயத்தின்நிலைமையைநோக்குங்கால் அதன் வேளாண்மையின்முதிர்ந்த விளைவையே பார்க்கிறோம். விவசாய முறைகளனைத்தையும்நாம் கவனமாகமனப்பாடம்செய்து பரிசைகளும் தேறிவிடுகின்றோம். ஆயினும், அனைத்திற்கும் ஆதாரமான நிலத்தின் அணுக்களினிடையே ஒற்றுமை இருந்தில்லாவிட்டால் அத்துணைச் செழிப்பான விளைவு ஒருபோதும் வாய்ந்திருக்காது என்பதை மறந்துவிடுகின்றோமே.கிருஷியின்உபகரணங்களைப்பெற்றுக்கொள்ள விரும்பிஅதனால்பயிர்செழித்துவிளையுமென்று எதிர்பார்க்கின்றோம். ஆயினும் விளைநிலத்தின் இயற்கையான பிரிவினை நாம் கவனிக்கவேண்டிய தொன்று என்று கண்திறந்துகூடப் பாராமல் அசட்டைசெய்துவிடுகிறோமே. அதுவுமன்றி, தருமத்தின் பேரால், அந்தப் பிரிவினையே என்றென்றும் நிலைத்திருக்கும்படி பிரயாசைப்படுகின்றோம். சரித்திரங்களின் மேல்அட்டைகளை மாத்திரம் நாம் படிக்கின்றோமேயன்றிஉள்ளிருக்கும் இதழ்களை நாம் பிரித்துக்கூடப் பார்ப்பதில்லை. ஒரு தேயத்தினர்களுக்கு இடையேயுள்ள பிரிவினைகளே ஆதாரமாக வைத்து அதன் சுயாதீனமான அரசியல் முறைகள் இதுகாறும் எங்கும் ஏற்பட்டது மில்லை, ஏற்பட்டதுபோல் தோன்றிய சிறிதும் பாதுகாக்கப்படுவதுமில்லை. பிரஜைகளுக்குள் பிரிவினையிருக்குமாயின்,அன்னவர், ஒருதனிச்சிறப்பு வாய்ந்த யாரேனும் ஒருவனது அதிகாரத்தினால் கட்டுண்டு கிடக்கின்றார்கள். எனினும், மிகச் சில நாட்களே இந்நிலைமை நிற்கக்கூடும்; மேலும் அவ்வதிகாரமும் சும்மா கைமாறியவண்ணமே யிருக்கும். மனிதருக்குள் பிரிவினை யெங்கிருக்கின்றதோ அங்குஆட்சி மாத்திரமன்றி அறிவும் தளர்ச்சி யடைந்துவிடுகின்றது. இத்தகைய தேயங்களில் இடையிடையே மேதாவிகள் தோன்றவுங்கூடும். எனினும், அம்மேதாவிகளின் விலைமதித்தற்கரிய கொடையைப் பெற்று வளர்த்துக் கொள்ளத்தகுந்த பாத்திரம் பொதுஜனங்களுக்குள்

இல்லாமையால், அக்கொடையானது பழுதுபட்டுப் பயனின்றிச் சிதைந்து போய்விடுகின்றது. ஒற்றுமையின்மையால் மனிதர் புல்ல ராகின்றார். ஒற்றுமைத் தளர்ச்சியால் மனிதவாழ்க்கை பயனற்றதாகின்றது. எல்லோருடனும் ஒற்றுமையாக வாழ்வதே மனிதனுடைய சத்தியமான தர்மமாம். மனிதன் சிரேஷ்டனாவதற்கு ஏதுவாவது இவ்வொற்றுமையே. ஒற்றுமைச் சிந்தையைக் குறித்த உபதேசத்தை உபநிடதம் செய்வதுபோன்றவோர் சிறப்புடன் வேறுஎந்நாட்டிலும் எந்தச் சாத்திரத்திலும் காண இயலாது. "வித்வான் இதி ஸர்வாந்தரஸ்த ஸ்வஸங்வித்ரூபவித்" (எல்லோருடைய இதயத்திலும்யார் இருக்கின்றானோ,தன்னுடைய சைதன்யம் அல்லது பிரக்ஞையின் தன்மையை யார் அறிந்திருக்கின்றானோ, அவனே வித்வான்) என்று பாரத நாட்டில் மட்டுமே யியம்பலாயிற்று. இவ்வாறாக, கொடிய கொடியவைகளும் பொருளற்றவைகளும் ஆகிய கணக்கில்லா விதிகள் பலவற்றால் மனிதர் ஒருவர்க்கொருவர் இப்பாரதநாட்டில் பிரிக்கப்பட் டிருப்பதுபோல் வேறெங்கும் இல்லை. ஆதலால், இப் பாரதநாட்டில் மிகப்பெரிய முரட்டுத்தனம் யாதோ ஒன்று உளதென்றும், அது இந்நாட்டின் அந்தரங்கமான சத்தியத்திற்கு முற்றிலும் மாறானதென்றும், அதன் மிகக் கொடிய தீமைகள் இப்பாரதநாட்டுச் சரித்திரத்தில் நெடுங்காலமாக நானாவித துக்கங்களாகவும் தரித்திரங்களாகவும் அவமானங்களாகவும் தோன்றிவருகின்றன வென்றும், நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

மதுரைக் கோவை

[283-வது பக்கத் தொடர்ச்சி]

XVIII. வெறியாட்டு.

செவிலி தலைவி மெலிவுகண்டு ஐயுற்று மொழிதல்

விழியும் பசந்து கழைத்தோ ளிணையு
மெலிந்துதளர்ந்
தழியுந் தனிநெஞ்ச மாகிநின் றாள்வையை
யாறுசென்ற
வழியுந் தமிழ்மணக் கும்மது ரேசர்
வரையிலின்னம்
பழியுந் தரவொழி யாதென்செய் தாள்குலப்
பாவையின்றே. 248.

கட்டுவிச்சியை வினாதல்

முலையோ பசலைமற் றேவறி யேன்றான்
முகிழ்த்ததின்றேன்
சிலையோ வெனும்புரு வத்திருப் பாவைக்குச்
செங்களப
மலையோ வெனுமுலை யாரொரு பாகர்
மதுரையிலுன்
கலையோ தெளிந்ததம் மேவந்த மாயமென்
கட்டுரைபே. 249

கட்டுவிச்சி கூறல்

பீலிச் சுமடு சடைக்கா டணிந்துதிர்
பிட்டருந்திக்
கூலிக்கு மண்சுமப் பார்சொக்க நாயகர்
கூடல்வெற்பி
லாலிக்கு மஞ்ஞையுஞ் செயவா ரணமு
மயிலுமுறச்
சாலிக்கு ணின்று சுழலுமென் னேகுறி
சாற்றுவதே. 250

வெறியாடுகென்றல்

செறியால கண்டர் திருவால வாயர்
சிலம்பில்வழை
வறியாள் துயருக் கருமருந் தாவ
தளவறியா
மறியா ருயிரிவ ளுக்குயி ராய
[வ]ரமுருகன்
வெறியா டுவதன்றி வேறுமுண் டோசில
மெய்மருந்தே. 251

வெறியாட்டிடத்து வெருவிக் கூறல்

சூராடல் மூவிலை வேற்சொக்கர் கூடனந்
தொன்மரபுக்
கேரா வெறியென்னை யேற்குமென் றாளென்
னிடரிதனாற்
றீரா தெனிலய லாரென்சொ லாரின்று
தீருமென்றாற்
கூராடல் வேலவர் கொள்கையென் னாமென்று
கூறுவதே. 252

தலைவி தோழிக் கறத்தொடு நிற்றல்

துதிக்குஞ் சதுமறை யார்சொக்கர் மால்வரைத்
தோகைமுன்னாள்
மதிக்கும் புனத்தில் வழங்கிய னாள்மதம்
பாயவந்து
சதிக்குங் கடகரி கையற்ற சோரித்
தடவருவி
குதிக்கும் புனலிற் குளித்தளித் தாளொரு
கோளரியே. 253

வெறி விலக்கல்

மருமுகங் கொண்டதண் டார்ச்சொக்க நாதர்
மதுரைவெற்ப
ரொருமுகங் கண்டு தெளிவதல் லால்வெற்
புருவத்தொட்ட
பொருமுக வேலண்ண லோராறு செவ்வியம்
பூங்கமலத்
திருமுகங் கண்டு தெளிவதுண் டோதுயர்
சேயிழைக்கே. 254

தோழி செவிலிக் கறத்தொடு நிற்றல்

குருமலர்க் கோதைவென் வேற்சொக்க நாயகர்
கூடற்செந்தேன்
றருமலர்க் காவி லிவளரு ளாண்மைத்
தடங்கணல்லாய்
மருமலர்க் கோயிலவ் வண்டலம் பாவையை
மற்றொருபாற்
றிருமணக் கோலம் புகுதுநின் றாளொரு
செம்மலுண்டே. 255

சேவிலி நற்றய்க் கறந்தோடு நிற்றல்

பொற்பா லிவளொரு பேதையென் ருறும்
பொருவரிய
கற்பா லருந்ததி யுந்தர மோகட்
செவிபுணைந்த
மற்பா லியபுயத் தார்மது ரேசர்
வரையணங்கே
யிற்பா மரபின் மணிவிளக் காகமக்
கெம்மணையே. 256

வெறியாட்டு முற்றும்.

XIX. வரைவுமுடுக்கம்.

ஒருவழித் தணந்துவந்த தலைவனுேடு தோழி புலந்துகூறல்

காயுங் கவட்டிலை வேற்சொக்க நாதர்
கடம்பவனத்
தாயுங் கலவி யழுந்திய நாள்நெஞ்
சழன்றுபட்டுத்
தேயும் பருவக் கரும்பைநண் பாகமைத்
தோளகன்று
போயுந் தரித்தனை யோதரி யாரன்பு
பூண்டவரே. 257

அயலர் மணமுரைத்தல்

வாளைப் பொருகண்ணி தன்மணம் பேசி
வரைபொருளு
நாளைத் தருகைக்கு நாளுமிட் டாரிசை
நாவலர்க்கு
வேளைப் படுசொக்கர் வெள்ளிமன் ருளர்வெற்
பாளமற்றுன்
ருளைப் பிரிந்துயிர் வாழ்வதெவ் வாறிவள்
சொல்லெமக்கே. 258

முலைவிலை கூறல்

கொலைக்குத் தலைப்படுஞ் சூலா யுத[ர்]சொக்கர்
கூடலினுன்
னிலைக்குத் தரமென்று சொல்வதல் லாது
நிரைநிரைவண்
டலைக்கச் சுரிகுழல் வல்லிமுத் தார
மலம்புமிள
முலைக்குத் தரமல்ல வேயண்ண லேநெடு
மூதண்டமே. 259.

தலைவனுற்ற துரைத்தல்

தோயந் துளும்புஞ் சடைச்சொக்கர் தாளைத்
தொழாதவர்போல்
மாயம் புகுந்தடங் காமன மேயரை
மாத்திரையிற்
காயந் தனதென்னு மாவியொப் பாகவிக்
கன்னிதந்த
நேயந் தனதென்று நின்றயர்ந் தாயென்
னினைவுனக்கே. 260.

வரைவுமுடுக்கம் முற்றிற்று.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[281-வது பக்கத் தொடர்ச்சி]

ஆயா தோன்றும் வாயே தந்தான்

இன்னவாறு அனுமன் பொய்யிலாமல் இயம்பிய மொழிகளைக் கேட்டனன் இராமன். இவன் செந்தாமரைக் கண்கள் சிற்றத்தால் பின்னுஞ் சிவந்தன. முன்னே புவிக்கும் இனி அலைக்கும் அங்காந்த செவ்வாய் துடித்தது.

திறத்து மாமறை யயனொடைம் முகன்பிறர் தேடிப்
புறத்த கத்துண ரரியதன் பொலனடிக் கமல
முறச்சி வப்பவித் தரைமிசை யுறலற மாக்கல்
மறத்தை வீட்டுத லன்றியே பிறிதுமற் றுண்டோ

[நான்கு திறப்பட்ட சிறந்த வேதங்களும், பிரம்மதேவனும்,ஐந்து முகங்களையுடையசிவபிரானும்,மற்றஇந்திரன் முதலிய தேவர்களனைவரும் தேடி இப்பிரபஞ்சத்தின் உள்ளேயாகிலும் வெளியேயாகிலும் காணமாட்டாத அழகிய திருவடித் தாமரைகள் தரையில்நடந்து மிகவும் சிவக்கும்படி அவதரித்ததற்குக் காரணம், தருமத்தை நிலைநிறுத்தலும் அதருமத்தை அழித்தலும் அல்லாமல் வேறு ஒன்று உண்டோ]

என்ன இங்கு,எம்பெருமான் அவதரிப்பதற்கு ஆதாரமாயிருக்கின்ற நோக்கத்தைக் கம்பர் நினைப்பூட்டி, அம் மானுடநாடகத்திற்கு இயற்கையாகிய இராகத்துவேஷங்களுக்கு மிடமிருந்ததென்பதை அடுத்தபாசுரத்தில்,

ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
வாரம் வீங்குதோட் டம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவில னொருவன்ற னிளையோன்
தாரம் வவ்வின னென்றசொற் றரிக்குமா றுளதோ

[இரக்கத்தைவிட்ட சிறியதாயாகிய கைகேசி சொன்னாளென்று, மாலையணிந்த தோள்களையுடைய தன் தம்பி பரதனுக்கு, தனக்குரிய இராஜ்ய பாரத்தின் சுமையைக் கொடுத்தவனாகிய இராமன், இரக்கமற்ற ஒருவன் தன் தம்பியின் மனைவியை அபகரித்துக்கொண்டான் என்ற வார்த்தையைக் கேட்டுப் பொறுத்திருக்கக் கூடுமோ]

என இனிதின்விளக்குகின்றார். தன்னுடைய நிலையை நினைக்குங்கால் சுக்கிரீவன் இராமனுக்கு மிகவும் அளியனாய்த் தோன்றல் வேண்டும். ஆதலின் உடனே,

உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாரமு முனக்கின்று தருவேன்
புலமை யோயவ னுறைவிடங் காட்டென்று புகன்றான்.

[பதினான்குலோகமும், வாலியின்உயிரைக்காப்பதற்கு உதவியாக வந்து தடுக்குமாயினும், வில்லில்வைத்து விடுகின்ற அம்பினால் அழித்து, அரசாட்சியுடன் உன் மனைவியையும் மீட்டி இப்பொழுதே கொடுப்பேன். அறிவுடையவனே, அவன் வசிக்கின்ற இடத்தைக் காட்டு, என்று கூறினான்.]

விரைய விரைய அளித்த இவ்வாக்கின் அமைதியோ சால அயிர்த்தற்கு இடமாய் நிற்கின்றது. சிற்றன்னை சொன்னாளென்று ஆன்றபேரரசினைத் தன் தம்பிக்குக் கொடுத்தவனும், தன்னைக் காத்தற் பொருட்டு நித்திரையுந் துறந்து அடவியெல்லாம் இலக்குவனுல் தொடரப்பெற்றவனும் ஆகி நிற்கின்ற ஒரு இராமன்றன் நடத்தை இக்கருமத்தில் வேறுவிதமாயிருத்தலே தகுதியென்று எதிர்பார்த்தல் இயல்பு. வாலியின் விடயமாக இராமன் துணிந்து செய்தது ஒன்றும், அவனை வெறும் மனிதனேயாக வைத்து மதிப்போமாயின், பெறிது உத்தமனுக்குமா றில்லை. வான்மீகத்தில் சுக்கிரீவனேயும், இந்நூலில் சுக்கிரீவனது சார்பினனாகிய அனுமனேயும் தாம் வாலியின் குற்றத்தை இராமனுக்கு எடுத்துச்சொல்லியிருக்கின்றனர். இம்மொழிகளைக்கொண்டே வாலி குற்றவாளியென்று துணிந்துவிடுவது அரசமுறைக்குஅழகன்று. ஒருதலை ஆராய்ச்சியால் உரைக்குந் தீர்ப்பு நீதியோ ஆதற்கில்லை. வாலி தன்திறத்தில் யாது சொல்வதற்குளதென்பதையும் கேட்டல் வேண்டும். வான்மீகத்தில், பிலத்துவார வாயிலில் இரத்தம் நுரைத்ததைக் கூறுங்கால் சுக்கிரீவனது சொற்கள் குழம்பிய தன்மையே, ஆராய்ச்சி உணர்வுடையோர்க்கு, இத்துணையும் உண்மையோவென அயிர்த்து மேல் வினவுதல் வேண்டும் என நினைப்பதற்குப் போதும். அவ்வாறு ஆராய்தலின்றியும் வாலியின் வாய்மொழி கேளாமலும், அவ்வாலியைக் குற்றவாளியே என்று கொள்வதுமன்றி அவனுக்கு மரணதண்டனையும் விதித்து அத்தண்டனையைத் தானே நிறைவேற்றி வைப்பதாகவும் இராமன் வாக்களித்துவிடுகின்றான். நண்பனும் நீதிபதியும் கொலைபாளியும் ஒன்று சேர்கின்ற கொள்கைத்து இது. இவ்வகையில் பண்டைய இராமனுக்கும் இன்றைய இராமனுக்கும் வேற்றுமை பெரிதுளது. ஒரு சிறு பிள்ளையாய்க் கோசிகன் வேள்வியைக் காத்தற்கு உடன்சென்ற நாள், அம்முனிவன், தாடகை இயற்றும் கொடுமைகளை எல்லாம் பலபட இயம்பி, "அவள் இவ் வங்கநிலமெங்கும் குலங்களொடு அடங்க நனி கொன்று திரிகின்றாள்" என்று முடித்தானுனும் இராமன் அவளது குற்றத்தைப் பற்றி யாதும் முடிவுகொள்ளாமல், "எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள்" என்று வினவினனேயன்றி, இத் "நீத்தொழில்" என்றோர் அடைமொழி அமைக்கவும் உடன்பட்டிலன். விருப்புவெறுப்பற்றவோர் நற்றவமுனிவன் கூறிய ஓர் கரியை ஆராய்ச்சியின்றி முன் ஏற்றுக்கொள்ள மறுத்த இவ்விராமன், வாலிக்கு வெம் பகைவனும் முறையில் நிற்கின்ற ஒரு குரங்கின் கூற்றைக் கூறுமுன்னம் கொண்டுவிட்டனனென்றால் இவன்றன் நீதியை என்னென்று மதிப்பது! மனுவின் மரபிற்கிது மாண்புறப் பொருந்தாமை போன்றே, 'வாலியை வதைப்பேன்' என்று வாய்தந்த வேகமும் ஓர் அண்ணனுக்கு அழகன்று. வாலி குற்றமுடையவனே என்று கொண்டவிடத்தும், சுக்கிரீவன் உற்றகுறை உண்மையே யாயினும், அதற்குக் கழுவாயும் இதற்கு நீக்கமும் ஆகவல்லது வாலியை வதைக்கும் வகையொன்றே யென்று கருதவேண்டாவே. குற்றத்தில் வாலிக்குக் குறைந்தவனல்லன்,கொடிய இராவணன். முதற்போர் இறுதியின்கண், அவனை நோக்கி,

சிறையில் வைத்தவ டன்னைவிட் டுலகினிற் றேவர்
முறையில் வைத்துநின் றம்பியையிராக்கதர் முதற்பேர்
இறையில்வைத்தவற் கேவல்செய்திருத்தியேலின்னும்
தரையில் வைக்கிலெ னின்றலை வாளியிற் றடிந்து

எனப் பின்னர் உரைக்கஇசைந்த வாசகத்தை இன்று வாலியின்பாற் சென்று சொல்லியும் அவன் வணங்கியிணங்கானாயின் பின்னர், வில்லிடை வாளியின் வீட்டிச் செய்வதைச் செய்திருக்கலாமே. வாலியின் குற்றத்தை ஆயவுமில்லை,மற்று அவன்கழிவிரக்கங்கொண்டு உய்வதற்கு ஓர் அமயம் அளிக்கவும் இல்லை. இராவணன்சிதையை வெளவியதன்றியும் புரிந்துள மறங்கள் பலப்பலபிற. வாலியோ இழைத்ததெல்லாம் சுக்கிரீவன்பால் விளைந்த இப்பிழையேயன்றி வேறில்லை என்பது அனுமன்வாக்கினின்றே தெரிகின்றது.இப்பிழை வாலி செய்ததற்கு நிலைக்களமும் இல்லாமற் போகவில்லை. மாயாவியைக்கொன்ற அவ்வெற்றியின் வெறியுடன் வருகின்றான்; பிலத்தின் வாயிலோ, மலைகளால் அடைக்கப்பெற்றிருக்கின்றது; காவலில் நிற்கவேண்டிய தம்பி அரசுவீற்றிருக்கின்றான். இக்காட்சியைக் காண்கின்ற ஒருவன் உள்ளத்தில் கரைசெயற்கரிய சீற்றம் பொங்கியெழுந்து தகவுடைய மதியின் நுட்பத்தை மறைத்துவிட்டது. வெகுளி குற்றமேயாயினும்,பொறுத்தற்குரியதோர்குற்றமேஎன்ன நீதிநூல்கள் தணிக்கும். வாலி சுக்கிரீவனுக்குச்செய்த கொடுமையெல்லாம், ஆழ்ந்துநோக்கின்சிற்றத்தால் விளைந்ததோர் பிழையின் காரியம். வாலியின்முன் அவன் தம்பியைக் கூட்டிச்சென்று, உற்றவைகளை எடுத்துச்சொல்லி அண்ணனுக்குந் தம்பிக்கும் இடையே இழந்திருந்த அந்நட்பை மீண்டும் செய்துவைக்கவல்ல செவ்வி நேர்ந்தும் இராமன் அதனைக் கைக்கொள்ளச் சற்றேனும் நினையாமல், கொலையே தலைகொண்டு நிற்கின்றான். சுக்கிரீவன் மனைவியாகிய ருமையை வாலி கைப்பற்றிக்கொண்டது காமத்தால் என்றெண்ண இடமில்லை.சுக்கிரீவன் தனக்குச் செய்தான்என்று அவன் எண்ணிய துரோகத்தைக் கண்டு வெகுண்டு பழிக்குப் பழியாகவே அவளை நிறுத்திக்கொண்டு சுக்கிரீவனைத் துரத்தினன் போலும்.பின்னர் இவன், இராமன்ஏற்றிய இக்குற்றத்திற்கு எதிர் விளம்புவானாகி,

ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்னெமைத் தேமர் மேலவன்
எய்தி னெய்திய தாக விபற்றினன்

எனச் செப்புவதினின்று, முதலில், பழிக்குப் பழியாகவே சுக்கிரீவன் மனைவியை இவன் நிறுத்திக்கொண்டானுனும், பின்னர்அவளைப் பெண்டாண்ட பாதகம் இவன் வாய்நின்றே தெரிகின்றதென உறுதி கூறுதலியலாது. ஏனெனில், சுக்கிரீவன் தனக்குத் தீங்கு செய்தான்என்பதை வாலிஎடுத்துக்கூறியாதும் எதிர்வழக்கு இயம்பவில்லை. அது அந்நிலையில் அவசியமுமன்று. இராமன் தன்அம்பைச்செலுத்துவதன்முன் எதிர்வந்து கேட்டிருந்தானாயின் கூறிப் பயன்படத்தக்கது அது. இப்பொழுது அவ்வமயம் விஞ்சிவிட்டது. "நீ இயம்பிய தத்தனையும் நான் இழைத்தேன் என்றேவைத்துக்கொள்; மற்று,மறைந்துநின்று என்மீது அம்பு எய்யயாரோ, ஒருநீ" என்னும் முறைமையில் இராமனது செய்கையின் தகவின்மையையே அங்குக்காட்டும் நினைவினன் வாலி; ஆதலின், "ருமையை நான் தாரமாக் கொண்டேனானும், நின்னால் ஒறுத்தற்குரிய குற்றமன்றே யது" என்னும் குறிப்பே அவ்வாசகத்திற் கிசைகின்ற தன்றித் தான் அக்காரி

m211, N28K N
N34.219
199169

யம் செய்தான் என்று ஒத்துக்கொண்டபடி யாகாது. அவ்வாருயின், "உன் தம்பிக்குக் கோது இல்லை என்பது உணர்ந்தும் இரங்கலை" என்று இராமன் இடித்துரைத்ததற்கு வாலி யாதும் எதிர் இயம்பாமையைக்கொண்டு, கோதிலாதவன் தன் தம்பி என்பது உணர்ந்தே அவனைக் கொலைகொண்டு துரத்தினன் என்னக்கொள்ளல்வேண்டு மென்று யாருங் கூறமாட்டார். எனின், சுக்கிரீவன் செய்த பிழைக்குத் தண்டனையாமாறு அவன் மனைவியை வாலி கைப்பற்றிக்கொண்டது போன்றே, இராமன், வாலி செய்த பிழைக்குத் தண்டனையாக வேண்டுமெனின் அவன் அரசினைச் சுக்கிரீவனுக்குக் கொடுத்துவிடும்படி வற்புறுத்தி நட்பின் இலாபத்தையும் நிறைவேற்றி யிருக்கலாம். இவ்வண்ணம்,வாலியை வீட்டுதல் இன்றியே, சுக்கிரீவனுக்குத் தலைமையுந் தாரமும் தருதற்கு இயலினும் இயலலாம் என்பதைச் சிந்திக்கக்கூடச் சிந்திக்காமல்கொலைநவில் வாக்கொன்று கொடுத்துவிடுகின்முன் இராமன். இது தக்கதன்று. ஆயினும் ஒன்று; நட்புச் செய்துவைப்பதாயின் வாலியை இராமன் நேரே சந்திக்கவேண்டியது அவசியமாகின்றது. நேரிற்சந்தித்து, பாணம்எய்த பின் அவனுக்குச்சொல்லநினைத்திருந்த தருமோபதேசங்களையெல்லாம் முதலிலேயே சொல்லி, தம்பிக்குத் தலைமையும் தாரமும் தருமாறு கேட்டு, அது மறுத்தானயின், "நின்தலையைத் தரையில் வைப்பேன், வா போரிற்கு" என அறைகூவுவதாயின், பின் அவனை மறைந்துநின்று கொல்வதென்பது இயலாது. மற்று, இராமனே, வாலியைக்கொல்லும் வகை மறைவிடமிருந்து ஓர்அம்பு எய்வதுவேஎன்ன, யாது காரணத்தினுலோ, இப்பொழுதே துணிந்துவிட்டான்போலும். "புலமைபோய் வாலியைக்காட்டு" என்னுமல், "அவன்உறைவிடங்காட்டு" என்றுகேட்பதே அக்குறிப்பினைக் காட்டிக்கொடுக்கின்றது. "கிட்டுவார் பொரக்கிடைக்கினன்னவர் பட்டநல்வலம் பாகமெய்துவான்" என்றுவாலியைப்பற்றி அனுமன்சொல்லியிருக்கின்ற சொற்கள்உறுத்தியநெஞ்சினின்றெழும் அச்சத்தின் கிளர்ச்சியோ இது! இப்படி எதிர்ப்பட்டவர் வரத்தினும் உரத்திலும்பாதி வாலியை எய்திவிடும்என்னும் செய்தி வான்மீகர் நூலினுள் காணப்படவில்லை. ஆயினும், "ஐய, யாது காரணத்தால் வாலிக்கும் உமக்கும் பகை நேர்ந்தது? உண்மையாக இதைக் கேட்க விரும்புகின்றேன். பகையின் காரணத்தை யறிந்து, பின்பு நமது பலத்தையும் அவனுடைய பலத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, உமக்குச் சுகத்தை உண்டாக்கும் வழியைத் தேடுகின்றேன்" என்று சுக்கிரீவனுக்குச் சொல்லியவண்ணம், வாலியின் செய்தி யத்தனையும் கேட்டபின், அவன் பலத்தையும் தன் பலத்தையும் நன்ருகச் சீர்தூக்கிப்பார்த்து இறுதியில்,எதிர்நின்று போர்புரிவதனினும், மறைந்து எய்வதே 'சுகத்தை உண்டாக்கும்வழி' என்று, வாலியின் இயற்கையான வலிமைக்கே தன்னால் எதிர்நிற்க இயலாதென இராமன் எண்ணிவிட்டான் என்றுதோன்றுகின்றது. வாலி தன் கண்ணிற் படவேண்டுமென்றுகருதினனன்றித் தான் அவன் கண்களிற்பட விரும்பிய சொற்கள் இராமனது உரையில் இல்லை. தான் நேரே செல்லாவிடினும், பின் இராவணன்பால் அங்கதனை அனுப்பியதுபோல், ஒரு தூதனை வாலியின்பால் முன்னரே அனுப்ப நினையாமைக்கும் இக்காரணங்கள் பொருந்தும். சுக்கிரீவனுக்குத் தான் துணையாய் நிற்பதை வாலிக்குத் தெரிவித்தபின் மறைந்துகொல்லல் மாட்டுவதொன்றன்று.

எனின், 'வாலியைக் கொல்வேன்' என்று வாக்குத் தந்தது, ஆராய்ச்சியுமின்றி, அதுவே அவசியமோ வென்று சிந்தித்தது மின்றி விரைய வந்ததோர் தகவிலா வாசகம். எத்துணை நான் முயன்ருலும் இதற்கெதிர் விளம்பி இராமன் தன் நேர்மையை நிலைநிறுத்த முயல்வதெல்லாம் வீண். "என்னை ஏன் மறைந்து நின்று கொன்ருய் கொன்ருய்" என்று வாலி நெருக்கியதற்கெல்லாம் பதிற்சொல்ல மாட்டாமல் இராகவன் நின்றுவிட இறுதியில்,

முன்புநின் றம்பி வந்து சரண்புக முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று செப்பினன் செருவினீயு
மன்பினை யுயிருக் காகி யடைக்கல மியானு மென்றி
என்பது கருதி யண்ணன் மறைந்துநின் றெய்த தென்
[ருன்.

என இலக்குவன், முன் குறித்தபடி இராமன் முறையற்றுக் கொடுத்த அவ்வாக்கையே சமாதானமாகக் கூறும்வரை இழிய நேர்ந்ததென்ருல் வேறினி விளம்பல் வேண்டுமோ!

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 6-ம் தசகம்

[287-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பாசுரம்

நிறங்கரி யானுக்கு நீடுல குண்ட
திறங்கிளர் வாய்ச்சிறு கள்வ ரவர்க்குக்
கறங்கிய சக்கரக் கையவ னுக்கென்
பிறங்கிருங் கூந்த லிழந்தது பீடே.

பதக்குறிப்பும் உரையும்:—நிறங்கரியானுக்கு-மேகம் போன்ற கரியமேனியுடையவனுக்கு, நீடு-ஸப்த சமுத்திரத்தோடு வெகு விசாலமான, உலகு உண்ட-உலகத்தையும் பிரளயகாலத்தில் விழுங்கிய,திறம்-சாதுரியம், கிளர் - கிளரக்கூடிய அதாவது இப்போது சிறிதாய்க் கண்டாலும் பெரிய உலகத்தை விழுங்குவதற்கேற்ப, வாய்-திருவாயை உடைத்தான, சிறுகள்வர்-சிறியவடிவாலெல்லார்மனதையும் கவர்ந்துகொள்ளும்ஆச்சரிய சக்தியுள்ளவரான, அவருக்கு-வேதங்களாலும் அளவிடக்கூடாத பெருமையுள்ளவர்க்கு, கறங்கிய - எப்போதும் சுற்றிவரும் சக்ராயுதத்தைக் கையில்உடையவருக்கு (பக்தர்களின் துயர்பாடுகளை உடனுக்குடனே நிவர்த்திக்கும் நிமித்தம் ஸதாசுருசுருப்பாய்ச் சக்கராயுதம் சுற்றிக்கொண்டிருக்கிறதென்று திருவுள்ளம்) பிறங்கு - நீண்டு இடுப்புவரையில் தாழ்ந்து, இரும் - அடர்ந்து நெருங்கிய, கூந்தல்-திவ்வியகூந்தலுடைய, என் மகள், பீடு - பெருமையை - அழகு ஸாமர்த்தியம் ஞானம் இவைகளால் அடைந்த சிறப்பை, இழந்தாள் - அவரை நினைத்து நினைத்துக் காணுமையாலே இழந்தாள்.

விசேஷக் குறிப்பு:—திருவிக்கிரமாவதாரத்தில் உலகங்கள் நிரம்ப விரிந்த திருமேனி, பிரளய காலத்தில்

ஓர் ஆல் இலையில் படுத்துறங்கும்படி அவ்வளவு சின்னதாயிற்றேஎன்றஆச்சரியத்தைச் சிந்தித்த திருவுள்ளமுடைய ஆழ்வார் பின்னையும், உலகங்களையெல்லாம் விழுங்கத்தக்க பெரிய வாய் நம் பகவானுக்கு எப்படி வாய்த்தது என்றவிஸ்மயம் கொள்கின்ருர். ஆழ்வார் தம் மனக்கண்ணுல் பராமர்சிக்கும்போது அதற்கு அந்தச் சக்திக்கேற்க ஹேஷியமிருப்பதாய்த் தம் திருவுள்ளத்தில் தெளிவடைகிருர்.

4-ம் பாசுரம்

பீடுடை நான்முகனைப் படைத்தா னுக்கு
மாடுடை வைய மளந்த மணளற்கு
நாடுடை மன்னர்க்குத் தூதுசெல் நம்பிக்கென்
பாடுடை யல்கு லிழந்தது பண்பே.

உரை:—பீடு - பெருமை, உலகங்களில் அவரவர் பாப புண்ணியத்திற் கேற்பப் புது ஜந்மங்களை அவரவர்களுக்குக் கல்பிக்கத்தகுந்தசக்திஉடையவனகிய, நான்முகனை - பிரம்மாவை, படைத்தானுக்கு - ஜீவாத்மாக்கள் புது தேஹாவஸ்தையில் நற்றவம் செய்து உய்ந்துபோம்பொருட்டுக் கரண களேபரங்களை உதவின பகவானின் ஔதாரியத்துக்கும்; மாடுடை வையம்-இவ்வண்ணம் பிரமன் செய்யும் சிருஷ்டிகள் வாழ்ந்து காலம்கழிக்கத் தாராளமானபூமி (இடம்)யை அளந்தபோது தன் திருவடிகளை அவர்களுக்கு உபய ஹேதுவென்றும் பலனென்றுங் காட்டின ஸௌசீலியத்திற்கும் ஈடுபட்ட என் பெண்ணின் மனத்தை இழுத்துத் தன்னைமணந்து வாழ்க்கைப்படச்செய்த மணளரின் குணத்துக்கும்; தேசமெல்லாம் ஆளும்படி தனக்கு ஆச்ரிதரான பாண்டவர்களுக்குத் தூது சென்ற குணபரிபூர்ணருக்கும்,பாடுடை-விசாலமான, அல்குல்-நிதம்பத்தையுடைய என் பெண், பண்பை-தன் சீர்மையை, இழந்தாளென்கிருள்.

குறிப்பு:—மணளன் என்று புது மாப்பிள்ளைக்குப் பெயர். இப்பாசுரத்தில், அதிகம் சொல்லிப் பயனென்ன; இப்பிராட்டி வைபம் அளந்த ஓரே ஸௌலப்பியத்தால் ஈடுபட்டு அதற்காகவே பகவானை மணந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தாளென்பதை "மணளன்" என்றபதத்தால் அறிவிக்கிருர்.

ஸ்வாபதேசத்தில் திருவிக்கிரமவதார ஸௌலப்பியமே ஆழ்வாரை ஈடுபடுத்திவிட்டதென்று திருவுள்ளம். மேலே விவரித்த உரையில் அந்த உபகாரத்தின் முக்கிய கருத்துக்கள் விளங்கியிருப்பது காணலாம்.

5-ம் பாசுரம்

பண்புடை வேதம் பயந்த பரனுக்கு
மண்புரை வைய மிடந்த வராகற்குத்
தெண்புனற் பள்ளியெங் தேவ பிரானுக்கென்
கண்புனை கோதை யிழந்தது கற்பே.

குறிப்புக்கள்:—பண்புடை வேதம் - பகவானின் குணங்களையும் அதிசயங்களையும் வர்ணிப்பதற்குத் தக்க மாட்சிமையுடைய வேதம். வேதம் அநாதியாயுள்ளது, அதைப் பயந்ததாவது-பிரம்மாவுக்கு முதலில் உபதேசித்து அருளியது. மண்புரை-மலைகளானும் வேறு எதுவானுலும் மண்ணேடு கலந்திருக்கின்றதாகிய, வையம்- இப்பூமி, இடந்த-ஜலார்ணவத்தில் முழுகிக்கிடந்த இந்தப்பூமியை வராஹாவதாரம் எடுத்து மேல்தூக்கி எடுத்தது, தெண்புனல் - தெளிந்த நீர் அதாவது பால்சமுத்திரம், எம் தேவபிராஸ் - எம் பிரபு, அமரர்கள் அதாவது நித்திய ஸூரிகளுக்கும் பிரபு - கண்புனை - கண்களைக் கட்டிவிடுகிற அதாவது பார்த்த கண்களைத் திரும்பி வாங்கவொட்டாத கட்டழகி - கோதை (அழகான) தலைமுடியுள்ளவள். கற்பே - விவேகத்தால் தெளிந்த புத்திமதி - இதை - இழத்தலாவது - தன்னை யறியாமல் வெட்கத்தைவிட்டுத் தன் மனேநிலைமையைப் பிறரறியத் தெரிவித்தல். இப்படிக் காமவேட்கையால் பீடிக்கப்பட்ட மனேநிலைமையைத் திருவள்ளுவநாயனர் "நிறையழிதல்" கீழ் விவரிக்கிருர்; "நிறையெனப் படுவது மறை பிறரறியாமை' என்று கூறியபடி பிரரறிய இயம்புவது அதனை அழித்தலாகும்.

பொழிப்புரை:—தன் குண ஸ்வரூப விபூதிகளை எடுத்துரைக்கவல்ல வேதங்களைப் பிரமனுக்குக் கொடுத்துதவிய ஔதாரியத்துக்கும், பூமி பிராட்டியைஜலத்தினின்று மெடுத்து அழகான வராஹனய் மணந்துகொண்டதையும், திருப்பாற் கடலிலே இலக்குமி பிராட்டியுடன் வீற்றிருந்து அமரர்களுக்குத் திவ்வியமான ஸேவை ஸாதித்ததையும், திருப்பாற் கடலிலே இலக்குமி பிராட்டியுடன் பள்ளிகொண்டிருக்கும் அழகுக்கும், ஈடுபட்டு என் பெண்பிள்ளை தன் கற்பை இழந்தா ளென்கிருள்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா — I.D.L. பிருங்காமலகதைலம் — கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. டி. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராச — சிறந்த டானிக் — சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் — காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்]

199169

KALANILAYAM
REG. NO. M. 2324.

எல்லாவிதமான இன்ஷுரென்ஸ்களுக்கும்

ஜுபிட்டர் ஜெனரல் இன்ஷுரென்ஸ் கம்பெனி லிமிடெட்

யோசனை கேளுங்கள்.

நெருப்பு, கப்பல், மோட்டார், தபால், ரயில்வே இவைகளுக்கும் மரணத்திற்கும் இன்ஷியூரன்ஸ் எடுத்துக்கொள்ளுகிறோம்.

சென்னையிலேயே பாலிஸிகள் கொடுக்கப்பட்டுப் பணங்களும் பட்டுவாடா செய்யப்படும்.

1919-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்னையில் 1920-ம் வருஷம் முதல் வேலைசெய்து வருகிறது. பெரிய பாங்கிகளாலும் வியாபார ஸ்தாபனங்களாலும் மதிக்கப்பட்டது.

பூராவும் நம்பகமானது

(பெரிய முதலும் நிதியும் உடையது)

நேரிலாவது அல்லது நெ. 2547-க்கு போனிலாவது பேசவும்.

நாராயணதாஸ் கிர்தார்தாஸ்

(ஸ்தல மானேஜர்கள்)

நெ. 99, அரமனைக்காரன் தெரு, சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:

NATIONAL INSURANCE BUILDING,

362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
Managers.

Consult

NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,

Head Office:—

NATIONAL INSURANCE BUILDING,

362, China Bazar Rd, Esplanade, Madras.

for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
Managers.

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி

பழமரக் கன்றுகள்

முறைப்படி வளர்க்கப்படுவன

பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.

தேசாய் அண்டு கோ.,

17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

DESAI & Co., 17, Cross Road, Malleswaram, BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

“இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி”

இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)